பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை10 செவ்வாய்க்கிழமை (25.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:361

# சர்வகட்சிக் குழுக் கூட்டத்தில் இனி கூட்டமைப்பு பங்கேற்று அர்த்தமில்லை

## நாடாளுமன்றில் அரியநேத்திரன் அறிவிப்பு

கொழும்பு, நவம்பர் 25

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் தமிழ்க்கூட்டமைப்பையும் இணைத்துக் கொள்ளுமாறு இந்தியா, இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்த நிலையில் இலங்கை அரசு தமிழ்க் கூட்டமைப்புக்கு இனி அழைப்பு விடுத்தாலும் கூட்டமைப்பு அதில் பங்கேற்பதில் அர்தமேயில்லை - என்று அரியநேத்திரன் எம்.பி. தெரிவித்திருக்கிறார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தின் எழுபதுக்கும் அதிகமான அமர்வுகள் முடிவடைந்துவிட்ட பிறகு நாங்கள் இனி அதில் பங்கேற்பதில் எந்தப் பலனும் இல்லை - என்றும் அவர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று காலை 2 மணி நேர மின்வெட்டு அமுலுக்கு

யாழ்ப்பாணம், நவ.25

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் 10 மணி வரை மின் வெட்டு (16 ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச் சுடர் உள்ளே**

க.பொ.த.ப(சா) பரீட்சை

இன்று - ஆங்கிலம் I+II

நாளை - வணிகக்கல்வி

## நாடாளுமன்றத்தைக் கலைக்க நாள் பார்க்கிறாராம் ஜனாதிபதி!

### மங்கள சமரவீர தகவல்

கொழும்பு, நவ. 25

வரவு-செலவுத் திட்ட முடி ந்த பின்னர் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலை ார் என நம்பகமான மிக்க வட்டாரங்கள் மூலம் தமக்கு தெரிய வந்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சோதிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கராயன் குளத்திலிருந்து முன்னேறிய படையினர் பலரைக் காணவில்லை!

### இராணுவத் தரப்பில் தகவல்

கிளிநொச்சி, நவ. 25

கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்கராயன்குளம் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் இராணுவத்தினர் பலர் காணாமற்போயுள்ளனர் எனவும் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன எனவும் இராணுவத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கராயன்குளத்திலிருந்து ஏ- 9 வீதி நோக்கி ஞாயிற்றுக்கிழமை முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்ட இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீதும் அவர்கள் அமைத்திருந்த பாரிய மண்ணரன் மீதும் கடுமையான தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## மகாஜனா, யூனியன் கல்லூரிகளுக்கு இடைப்பட்ட படையினரின் முகாம்களை பின்நகர்த்தி மக்கள் நடமாட்டத்துக்கு உதவ முடியுமா?

### யாழ். படைத்தளபதியிடம் நீதிமன்றம் கோரிக்கை

கொழும்பு, நவ. 25

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை, மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள படைமுகாமை காங்கேசன்துறைப் பக்கமாகப் பின்நகர்த்தி, அப்பகுதியில் மக்கள் நடமாட்டத்துக்கு உதவ முடியுமா என்பது குறித்து நீதிமன்றத்துக்கு அறியத்தருமாறு யாழ். படைத்தளபதியை உயர்நீதிமன்றம் கோரியிருக்கிறது.

வலிகாமம் வடக்கிலிருந்து உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் - பொதுமக்கள் வெளியேற்றப்பட்டமையை ஆட்சேபித்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் மற்றும் மூவரும் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று உயர்நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் பிரச்சினை குறித்த மாநாட்டில் பேச லண்டன் செல்ல வைகோவுக்கு அனுமதி



சென்னை, நவ. 25

லண்டனில் நடைபெறும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக ம.தி.மு.க பொதுச் செய லர் வைகோ நேற்று லண்டன் புறப்பட்டுச் சென்றார்.

சென்னையில் இருந்து மும்பை வழியாக லண்டன் செல்லும் அவர், சென்னை விமான நிலை யத்தில் செய் தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்துப் பேச பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் லண்டனில் நடக்கிறது. இதில் பேச எனக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன!

கிளிநொச்சி, நவ.25

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தின எழுச்சி நிகழ்வுகள் இன்று தொடங்குகின்றன. தமிழீழ தாயகப் பிரதேசங்கள் எங்கும் சிவப்பு மஞ்சள் வர்ணக் கொடிகள் கட்டப்பட்டு, மாவீரர்களின் திருவுருவப் படங்கள் கொண்ட மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுச் சுடரேற்றல், (16 ஆம் பக்கம் பார்க்க)

## குடாக்கடல் மீன்பிடித் தடைகள் நீக்கப்பட்டதாக படையினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.25

யாழ். நகரை அண்டிய குடாக்கடல் பகுதி யில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த மீன்பிடித் தடைகள் நீக்கப்பட்டுவிட்டதாக இராணுவம் அறிவித்துள்ளதாக இலங்கை வானொலியில் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இதுவரை பாதுகாப்புக் கரிசனைகள் காரணமாக குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை பிரதேச மீனவர்கள் யாழ். குடாக் கடலுக்குக் (16 ஆம் பக்கம்

## 5 தமிழ் இளைஞர்கள் நேற்று வெள்ளவத்தையில் கைது

கொழும்பு, நவ.25

வெள்ளவத்தை மற்றும்பம்பலப்பிட்டியில் நேற்று திங்கட்கிழமை காலை விசேட அதிரடிப்படையினர் நடத்திய தேடுதலில் ஐந்து தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர். பொலிஸாருடன் இணைந்து நடத்திய தேடுதலில் வீதியால் சென்ற பல தமிழர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## 2 நாள்களுக்கு தொடர்ந்து மழை

யாழ்ப்பாணம், நவ.25

கிழக்கு, ஊவா மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் தொடர்ந்து இரண்டு நாள்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் கடந்த நான்கு தினங்களாக மழை பெய்து வருகின்றது. ஞாயிறு மற்றும் திங்கட் கிழமைகளில் அதிக மழை பெய்தது. தாழ்ந்த பகுதிகளில் நேற்று மாலையே வெள்ள (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் விவகாரம் குறித்து ஆராய கருணாநிதி தலைமையில் இன்று மீண்டும் சர்வகட்சிகள் கூட்டம்

சென்னை, நவ.25

ஈழத்தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு தமிழகத்தில் இன்று மீண்டும் சர்வகட்சிக்குழுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு முதல்வர் கருணாநிதி கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதுபற்றி முதலமைச்சர் கருணாநிதி கோட்டையில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது :-

நாளுக்குநாள் இலங்கையில் வாழும் தமிழர்கள் உயிர், உடமைகளை இழந்து, வாழ்வதற்கே பயந்து பாதிக்கப்படும் நிலையில் மேலும் மேலும் நம் சிந்தை கலக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அதுபற்றி நமது மத்திய அரசுடன் தொடர்புகொள்ளவும், மேற்கொண்டு நாம் எடுக்கவேண்டிய (16 ஆம் பக்கம் பார்க்க)

இது ஒரு விளம்பரம்

**உங்கள் வங்கி உலகில் முன்னிலையில் உள்ள வங்கியா?**

முதலீடு செய்வதற்குத் தீர்மானிக்கும்போது, நிதி நிறுவனத்தின் ஸ்திரத்தன்மை, நம்பிக்கை என்பவற்றில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்தும் முகமாக பண வைப்பாளர்களுக்கு மிகவுயர்ந்த பாதுகாப்பை வழங்குவதில் முன்னணி நிலையை நிரூபித்துள்ள இலங்கையின் வங்கியாள...

(தயவுசெய்து 9ம் பக்கத்தைப் பார்க்கவும்)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்


விலை மாற்றம்

இன்று தொடக்கம் பாணின் புதிய விலை 45/- ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதனை விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகம்.


## மூன்றாண்டு நினைவுப் பூக்கள்



பூவுலகு: 1941.02.02
விண்ணுலகு:2005.11.29

அமரர்
**வினாசித்தம்பி உதயச்சந்திரன்**

திதி : திரியோதசி

எங்கள் இதயத்தில் உறைந்துள்ள
அன்பான எமதருமை அப்பாவே
பாசமாய் எம்முடன் பரிவுடன் உறவாடி
எம்மை வாழவைத்த உதயதீபம் உதிர்ந்து
மூன்றாண்டென்ன மூவுலகு சென்றாலும்
எமது இதயக்கோயிலில் இருப்பீர் அப்பா
ஓம் சாந்தி

74, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## நவாலிச் சந்தை வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்

நவாலி, நவ.25

நவாலிச் சந்தையைச் சுற்றி பெரு வெள்ளம் சூழ்ந்துள்ளது. வியாபாரிகளும் பொருள்களை வாங்க செல்பவர்களும் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர்.

தொடர்ந்து பெய்து வரும் பெரும் மழையினால் பல பாகங்களிலிருந்தும் ஓடி வரும் வெள்ளம் இச்சந்தைக்கு அருகாமையிலுள்ள வாய்க்கால் வழியாக சென்று வயலை அடைவது வழக்கம்.

ஆனால் இங்குள்ள சிலர் இவ்வாய்க்காலை உயர்த்தி அத்திவாரமிட்டு மதில்களை கட்டியுள்ளதால் வெள்ளம் விரைவாக ஓட முடியாது வீதிகளிலும் சந்தையிலும் தேங்கி நிற்கின்றது.

இதனால் பொருள்களை வாங்கச் செல்லும் மக்கள் தமது உடைகள் நனைந்த வண்ணம் வெள்ளத்தில் சென்று பொருள்களை வாங்குகிறார்கள்.

தொடர்ந்தும் மழை பெய்தால் வெள்ளம் சந்தைக்குள்ளும் புகும் அபாயம் ஏற்படும் எனமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

(அ-100)


## எம்புறோடிங் ரை

நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்
பாடசாலை மாணவர்களுக்குரிய
69.00 லிருந்து ரை

எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
212, கோயில் வீதி, T.P.021 222 9607 நல்லூர்


## கண்ணீர் அஞ்சலி



அனலைதீவு ஐயனார் கோயில்
அன்னதானசபையின் முன்னாள்
தலைவரும் மக்கள் குழுத்தலைவரும்
சிறந்த சமூகசேவையாளரும் ஆகிய
**வேலாயுதம் திருச்செல்வம்**
அவர்களின் மறைவுச் செய்திகேட்டு

ஆழ்ந்த கவலை அடைவதோடு துயர் உற்று இருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
ஆறுமுகம் தியாகராசா குடும்பம்,
போரூர், சென்னை. T.P.600116

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்:20.11.1985
விண்ணில்:18.11.2006

செல்வன்
**திருநாமம் சிந்துஜன்**
(வவுனியா விவசாயக் கல்லூரி மாணவன்)

திதி 25.11.2008
(அபரபக்க திரயோதசி)

பிறந்த நாள்வந்து வாட்டுதுன் நினைவுகள்!
பெற்றவர் மற்றவர் மனங்களிலே வேதனைகள்!
மறந்திட முடியாத உன்னினிய பண்புகள்!
மேலோங்கி வந்தவுன் கல்வியின் வளர்ச்சிகள்!
திறந்த மனதாலே கவர்ந்திடும் வார்த்தைகள்!
தேடுகின்றோம் இத்தரையில் உன்னழகு வதனமதை!
துறந்தனையோ வாழ்வுதனை சுமையென்று நினைத்தனையோ!
தவமிருந்து பெற்றவுனை மறந்திட எல்லையுண்டோ

உன் பிரிவால் துயருறும்:
தங்கராசா (பேரன்)
குடும்பத்தினர்.

கவிதாநிதி
மனோகரா, அல்வாய்.


## இதோ உங்களுக்காக...!

**MONITOR**
LCD

| | |
|---|---|
| 15.6" Panora - | 15,500/= |
| 15" Acer - | 15,500/= |
| 17" Panora - | 19,250/= |
| 19" View Sonic - (multimedia) | 22,500/= |

CRT

| | |
|---|---|
| 15" LG - | 12,250/= |
| 17" ViewSonic Flat - | 16,000/= |

**ACCESSORIES**

| | |
|---|---|
| Recovery Card - | 1,900/= |
| Internal TV Card - | 3,000/= |
| TV Combo Box - | 3,000/= |
| Web Cam - | 1,900/= |
| Casing - | 4,200/= |
| FM Modulator - | 2,500/= |
| Modem - | 950/= |
| 3 in 1 Steering wheel - | 5,250/= |
| Bluetooth - | 1,000/= |
| Optical Mouse - | 500/= |
| Ball Mouse - | 350/= |
| Ide to Sata Converter - | 1,100/= |
| ATX PowerSupply - | 1,950/= |
| Multi Laptop Changer - | 3,750/= |

**UPS**

| | |
|---|---|
| Panora 650A - | 5,500/= |
| Prolink PC650 - | 5,800/= |
| Personal - | 6,100/= |
| DCP (auto shutdown) - | 6,200/= |
| PowerTree 1.2KV - | 13,000/= |

**PRINTER**

| | |
|---|---|
| HP D1460/1560 Color- | 4,400/= |
| Samsung ML1640LaserJet- | 12,500/= |
| Samsung ML2010 LaaserJet- | 13,250/= |
| HP 1005 LaserJet - | 13,250/= |
| Epson LQ300+11 - | 20,900/= |
| Epson LX300+ - | 19,900/= |
| HP 4355 All in one - | 16,250/= |
| Color Laser Jet - | 36,000/= |
| 3 in 1 Laser Jet - (Photocopy,Scanner,Printer) | 39,000/= |

**RAM**

| | |
|---|---|
| Kingston DDR11 512MB - | 1,300/= |
| Kingston DDR11 1GB - | 1,750/= |
| Kingston DDR11 2GB - | 3,600/= |
| Kingston DDR1 512MB - | 2,700/= |
| Kingstone DDR1 1GB - | 4,200/= |
| SD Ram 128Mb - | 950/= |

**SCANNER**

| | |
|---|---|
| Canon Lide25 - | 5,900/= |
| HP 2410 - | 9,250/= |
| Negative scanner- | 10,900/= |

**MOTHER BOARD**

| | |
|---|---|
| 478 Mother Board - | 6,000/= |
| LGA DDR1 - | 6,750/= |
| Asus P5GCMX1333- | 6,400/= |
| Intel D31 DDR11- | 8,000/= |

**VGA CARD**

| | |
|---|---|
| Pci Express 512Mb - MX8400 GS | 5,600/= |
| AGP 128MB - | 4,300/= |
| AGP 256MB - | 5,250/= |

**DVD WRITER**

| | |
|---|---|
| Samsung 22x Sata - | 3,200/= |
| CD Writer IDE - | 2,700/= |
| Samsung Combo Sata- | 2,700/= |

**WOOFER**

| | |
|---|---|
| Ego3nity 2.1ch - | 3,300/= |
| MicroLap 2.1ch - | 3,600/= |
| Creative sbs380 2.1ch- | 4,100/= |
| MicroLap 5.1ch - | 7,400/= |
| Multimedia Speaker - | 650/= |

**HARD DISK**

| | |
|---|---|
| 80GB Maxtor Sata- | 4,900/= |
| 160GB Maxtor Sata- | 5,400/= |

**TONER**

| | |
|---|---|
| HP 12A - | 5,250/= |
| HP 49A - | 5,250/= |
| HP 15A - | 5,250/= |
| HP 35A - | 6,900/= |
| HP 13A - | 5,300/= |
| ML2010 - | 7,700/= |

**SONY MP3 PENDRIVE**
* 1GB * FM Radio
* Pendrive * Head Phone
* MP3 * External Micro SD
* Voice Recording Solt
4,500/=

**ORANGE MP4 PLAYER**
* MP4 * Voice Recording
* MP3 * Head Phone
* FM Radio * Power Changer
1GB - 4,500/= 2GB - 5,500/=

**PEN DRIVE**
2GB - 850/=
8GB - 1,950/=
16GB - 4,850/=
32GB - 6,950/=

**MP3 PLAYER**
* 1GB * MP3 * USB Cable * Head Phone 2,500/=
* 2GB * MP3 * USB Cable * Head Phone 3000/=

**MP4 PLAYERS (Sony)**
*1GB (Expand 2 GB)
*Camara *FM Radio
*MP3 *Games
*Voice Recording
*USB Cable *Power Charger
*Head Phone *Driver CD
1GB - 8,500/= 2GB - 9,500/=

**MUSIC WORLD & COMPUTERS**
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)
Valued For One Week


## யாழ்.இந்துவில் இன்று சேவை நலன் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், நவ.25

யாழ்.இந்துக் கல்லூரி கணித ஆசானும் பிரதி அதிபருமான பொ.மகேஸ்வரனுக்கு யாழ். இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்படுகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் ஓய்வறையில் அதிபர் வீ.கணேசராசா தலைமையில் பாராட்டு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## மரண அறிவித்தல்கள்

### நடராஜா பரமநாதன்



இருபாலை கிழக்கைச் சேர்ந்த நடராஜா பரமநாதன் 23.11.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா தம்பதியினரின் அன்பு மகனும் திரு.திருமதி சதாசிவம் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலராணி (முன்னாள் ஆசிரியை, பாலர் கல்விக்கழக விக்னேஸ்வரா ஞானக் குழந்தை இல்லம், கோண்டாவில்) அவர்களின் அன்புக் கணவரும் நிஜந்தன் (முன்னாள் லிகிதர் நல்.பல.நோக்குக் கூ.சங்கம்) சிந்துஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராசமணி மற்றும் சீராழதேவன் காலஞ்சென்ற தர்மகுலராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இந்திராணி, பரமேஸ்வரன் யோகேஸ்வரன், புஸ்பராணி, சிவரீணந்தராணி, வசந்தராணி, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிந்துஜன், நிஜந்தன் (பிள்ளைகள்)
பரமேஸ்வரன் (மைத்துனர்)

காளிகோயிலடி,
கோண்டாவில் மேற்கு.

### திருமதி மனோன்மணி வேலாயுதபிள்ளை

வேலணை ஐந்தாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி வேலாயுதபிள்ளை (18.11.2008) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் அமரர்கள் காசிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த மகளும் அமரர்களான தாமோதரம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் அமரர் வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும் கமலாதேவி, அமரர் அஞ்சலிதேவி மற்றும் தருமசேகரன், அமரர் உருத்திரசேகரன் மற்றும் வசந்ததேவி, அமரர் நடனசேகரன் ஆகியோரின் அன்புத் தாயும் அருணகிரிநாதன், வீரலக்சுமி, காந்தன், தேவராசா ஆகியோரின் அன்பு மாமியும் தவராசா (ஓய்வுபெற்ற அதிபர்), அமரர் சிவமணி மற்றும் சகுந்தலாதேவி (ஆசிரியை), பத்மநாதன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை), கந்தையா (வர்த்தகர்), அமரசிங்கம் (ஓய்வூதியர்), அனுசியா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அஜந்தினி, யோகதாஸ், காண்டீபன், இயாமா, பிரதீபன், சஞ்சீபன், நிமாலினி, பார்த்தீபன், நீரஜன், சங்கீதா, நீரஜா, சசிகரன், துவாரகன், பிரியா, வித்தியா, ஹரிகரன், செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காயத்திரி, கெவின், அஞ்சலீனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.11.2008) திங்கட்கிழமை டொரன்ரோ கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.தருமசேகரன் (மகன்),
கா.தவராசா (ஓய்வுபெற்ற அதிபர், யா/இந்து ஆரம்பப் பாடசாலை),
கா.பத்மநாதன் (கனடா),(சகோதரர்கள்).

டொரன்ரோ, கனடா.
0014164213139
(80111)


## Direct Start



கொம்ப்யூட்டர் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Diploma in Ms Office 2007 DMO
Dip in Desktop Publishing DTP
Diploma in Web Design DWD
Tally Accounting Training CCA

இலவச பாடநூல்கள் மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ்களுக்கான பாடநெறிகள்.
ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்...

## மல்டிமீடியா பயிற்சிநெறிகள்

சுயதொழில் வேலை வாய்ப்பை பெற்றுத் தரக்கூடியதும், சர்வதேச தரச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளக்கூடிய மல்டிமீடியா கற்கை நெறிகள்.

40% OFF

Advanced Diploma in Digital Pre-Press
Diploma in Digital Video Production

மல்டிமீடியா - எண்ணங்களின் பிரதிபலிப்பு

**ASIAN-CSC COMPUTER EDUCATION**
26,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel: 021 222 5677
கிளை :
கொடிகாமம் வீதி, நெல்லியடி Tel: 077-31221..
Registered with Ministry of Vocational Education


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## 13 ஆவது திருத்தம் - வெறும் மாயமான் அம்பலப்படுத்துகிறார் கிழக்கு முதல்வர்

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இலங்கை அரசுத் தரப்பின் - சிங்களத் தலைமையின் - முக மூடியைக் கிழித்து அம்பலப்படுத்தியிருக்கின்றார் கிழக்கு மாகாணசபையின் முதல்வர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்).

அரசுத் தரப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு, அரசுத் தரப்புப் படைகளின் துணைக் குழுவாகத் தமது ஆளணியினரை இயக்கி, அரசுத் தலைமையின் தீர்மானத்துக்கு அமைய கிழக்கு மாகாண முதல்வரானவர் பிள்ளையான்.

அவரே, தமது நிலையை - தமது முதலமைச்சர் பதவிக்கான அதிகார மட்டத்தை - மனம் புழுங்கி, வெதும்பி, அம்பலப்படுத்த வேண்டிய அளவுக்கு நிலைவரம் வந்துவிட்டது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழர் தரப்புக்கு நியாயமான - நீதியான - தீர்வை அளிப்பதோ அல்லது அதிகாரத்தைப் பகிர்ந்து, உரிமைகளைத் தமிழர்களுக்கு வழங்குவதோ பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்கில் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கைத் தரப்பின் திட்டம் அல்ல.

மாறாக, தமது கைவிடமுடியாத வாழ்வியல் உரிமைகளுக்காகப் போராடும் ஈழத் தமிழர்களின், போராட்ட சக்தியாகவும் பலமாகவும் விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை அடியோடு அழித்தொழித்து, தமிழரின் பேரம் பேசும் வலுவைச் சிதைத்து, அவர்களைத் தங்களது நிரந்தர அடிமைகளாக்குவது ஒன்றே தென்னிலங்கையின் மேலாதிக்கப் பண்பியல்பில் அமைந்த தந்திரோபாயத் திட்டமாகும்.

இந்தப் பின்புலத்திலேயே தமிழர் தாயகம் மீது கொடூர யுத்தத்தை அது ஏவிவிட்டு, போர்வெறி கொண்டு அலைகிறது.

அதேநேரம், தனது இந்த மேலாதிக்க வெறிப் போக்கை மூடி மறைத்து, இனப்பிரச்சினைக்கு நியாயத்தீர்வு காணும் தாராள மனப் போக்குத் தனக்கு இருக்கின்றது என்பதைச் சர்வதேசத்துக்குக் காட்டுவதற்காக அது நடிக்கவும் பின் நிற்பதில்லை.

போர்ச் சன்னதம் மூலம் தான் ஆக்கிரமித்த கிழக்கில், ஒரு தேர்தல் நாடகத்தை அரங்கேற்றி, ஒரு பொம்மை ஆட்சியை அங்கு நிறுவி, அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதாக அது வேடமிட்டது இந்த அடிப்படையில்தான்.

அதற்கு முன்னோட்டமாகத் [illegible] ஆட்சிக்கட்டில் இடம் பெற்றிருக்கும் கட்சிகளைக் கொ[illegible]டு, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் என்[illegible]ட்டத்தை அரங்கேற்றி, அதன்மூலம் அரசமைப்பி[illegible] பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானத்தையும் கண்கட்டு வித்தைச் செயற்பாடாக மேற் கொள்ள வைத்தது அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் இந்த அரசு.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, பின்னர் நடைமுறைப்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டு, குப்பைக்குள் வீசப்பட்டுக் கிடந்ததுதான் இந்த அரசமைப்பின் 13 ஆவது திருத்தமும் அதன் கீழான அதிகாரப் பரவலாக்கமுமாகும்.

அரசமைப்பில் சட்டரீதியாகச் சேர்க்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கலைக் கூடத் தமிழர்களுக்கு வழங்குவதற்கு சிங்களம் தயாராக இல்லை என்பதையே இருபது வருடங்களாக அதை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்து வரும் தென்னிலங்கையின் இந்தப் போக்கு அப்பட்டமாக அம்பலப்படுத்தி நிற்கிறது.

இந்த அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டுவிட்டது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு சகல சட்ட, நியாய அதிகாரங்களும் உண்டு. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவர் தாம் விரும்பினால்- அதற்கு மனம் இருந்தால் - தம் பாட்டிலேயே அதை நடைமுறைப்படுத்தலாம். அதற்கு யாரின் அனு மதியையோ, இசைவையோ பெற அவர் காத்திருக்க வேண் டியதில்லை.

ஆனால், இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவைக் கூட்டி, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் விடயத்தை ஒரு தீர்மானமாக அங்கு நிறைவேற்றச் செய்து ஒரு நாடகம் ஆடினார். அதன் மூலம் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் காதில் அவர் பூச்சுற்றினார்.

அந்தக் கதைக்கு எடுபட்ட இந்தியா ''அதிகாரப் பரவலாக்கல் நோக்கிய திசையில் இது ஒரு முதல் அடி'' - என்று அந்த நடவடிக்கைக்குப் புகழாரம் சூட்டி, புளகாங்கிதம் அடைந்தது.

அப்போதே, இது ஏமாற்று நாடகம் என இந்தியாவுக்குச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இந்த நாடகத்தில் முக்கிய பங்குதாரர் பாத்திரம் ஏற்று நடித்திருந்த பிள்ளையான் இப்போது முதலமைச்சர் கதிரையில் அமர்ந்துகொண்டு உண்மை நிலைமையை அம்பலப்படுத்துகின்றார்.

''கிழக்கு மாகாணசபைக்கு சிறிதளவேனும் அதிகாரம் வழங்கப்படவில்லை. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட - பகிரப்பட்ட - அதிகாரங்களைக் கூடக் கையாளும் நிலை எனக்குக் கிடையாது.'' - என்பதைப் பிள்ளையான் இப்போது பகிரங்கமாகவே போட்டுடைத்திருக்கின்றார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் அதிகாரத்தைத் தமிழருக்குப் பகிரப்போகிறார் எனக் கயிறுவிட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தூக்கி வைத்துக் கொண்டாடிய இந்தியாவுக்கு, பிள்ளையான் மனம் புழுங்கி இப்போது வெளியிட்டிருக்கும் இந்தக் கருத்துகள் சமர்ப்பணம்.

## மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்துள்ளமையால் மின்வெட்டு நேரம் மேலும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.25

சுன்னாகம் மின் வழங்கும் நிலையத்தில் உள்ள இலங்கை மின்சார சபையின் இரண்டு மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்துள்ளன. அதனால் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிமை முதல் மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். மின்பிறப்பாக்கிகள் திருத்தப்படும்வரை இந்த மின் வெட்டு அமுலில் இருக்கும்என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின்நிலையத்தில் இரண்டு மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்துள்ளமையாலும், தற்போது நிலவும் கால நிலை காரணமாக மின்பாவனை அதிகரித்துள்ளமையாலும் கடந்த சில தினங்களாக மின் வெட்டு நேரத்தை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதனால் சில பகுதிகளுக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் மின்வெட்டை அமுல்செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நேற்றுத் திங்கட் கிழமை பிற்பகல் 2 மணி முதல் ஏற்பட்ட மின்வெட்டு 'அக்றிக்கோ' மின் உற்பத்தி நிறுவனத்தின் பிரதான மின் ஆளியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இடம் பெற்றது - என்றார் அவர். (50)

## பருத்தித்துறை செயலகத்தில் பதிவுக்கிளை

யாழ்ப்பாணம், நவ.25

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் கிளை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் காரியாலயத்தில் இதுவரை காலமும் பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொதுமக்களின் பிறப்பு, இறப்பு, விவாகம் தொடர்பான பதிவுகள், சான்றிதழ் வழங்கல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இவை தொடர்பான ஆவணங்களை இடம்மாற்றுவதற்காக எதிர்வரும் 27ஆம் திகதியிலிருந்து மேற்படி செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. அதன் பின்னர் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் புதிய கிளை மூலம் தொடர்ந்து செயற்படுத்தப்படும் என பருத்தித்துறை பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (202)

## ஆப்கான், ஈராக் போரில் அமெரிக்கா பெற்ற அனுபவம், இராணுவ நடவடிக்கையால் பயங்கரவாதம் ஒழியாது"

### இலங்கை அரசுக்கு சுட்டிக்காட்டுகிறார் அமெரிக்கத் தூதுவர் பிளேக்

கொழும்பு, நவ.25

இராணுவ நடவடிக்கைகளால் மாத்திரமே பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டிவிட முடியாது என்பதை ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் வேறு நாடுகளிலும் நாம் பெற்ற அனுபவங்கள் வாயிலாக பாடம் படித்துள்ளோம். இதனால்தான் இலங்கையிலுள்ள சகல சமூகங்களினதும் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் அரசியல் தீர்வு ஒன்றை முன்னெடுக்கும்படி இலங்கை அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் பிளேக். 'லங்கா கார் டியன்' சஞ்சிகைக்கு தூதுவர் பிளேக் அளித்துள்ள பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார். அந்தப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில், அவ் வாறான ஒரு தீர்வானது சமூகங்களுக்கிடையில் நல்லிணக்க உணர்வுகளை மீளக் கட்டியெழுப்பு வதை விரைவுபடுத்துவதாக இருக்கும். முக்கியமாக தமிழர்கள் தம் எதிர் காலத்தை நம்பிக்கையோடும், கண் ணியத்தோடும், ஒருங்கிணைந்த இலங்கை நாட்டில் எதிர் கொள்ளக் கூடியதாக இருக்கும். இலங்கைத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் தாங்களே என்று விடுதலைப்புலிகள் கூறிக்கொள்வதை இது நிராகரிப்பதாகவும் இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

'இலங்கையில் அதிகாரப் பரவலுக்கான பொருத்தமான கட்டமைப்பு எதுவாக இருக்கவேண்டும் என்ற கேள்விக்கு பிளேக் பதில் அளிக்கையில், இலங்கையர்களே தீர்மானிக்க வேண்டிய ஒரு விடயம் இது. எமது அக்கறை என்னவென்றால் இலங்கையில் வாழும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதான அமைதித் தீர்வு ஒன்று ஏற்பட வேண்டும் என்பதே என்று கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில், சமீபகாலத்தில் இலங்கை யில் ஏற்பட்ட மனித உரிமைப் பிரச் சினைகளின் காரணமாக அமெரிக்காவின் இலங்கைக் கான இராணுவ உதவிகளைநிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இராணுவ ஒத்துழைப்பும் மட்டுப்படுத்தப்பட வேண்டியேற்பட்டது. இலங்கையில் மோதல்களுக்கு ஒரு முடிவு ஏற்படும்போது மனித உரிமைப் பிரச்சினைகள் குறையும் என்று நாம் நம்புகின்றோம். அதன்மூலம் எமது இராணுவ ஒத்துழைப்புகள் அதிகரிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படலாம்-இவ்வாறு பிளேக் தமது பேட்டியில் தெரிவித்துள்ளார். (ப)

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் டிசெம்பர் மாதத்தில் வெளிவரும்

கொழும்பு,நவ.25

ஜி.சி.ஈ.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் வெளியிடப்படவுள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளே இவ்வாறு வெளியிடப்படவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சை 1815 நிலையங்களில் நடைபெற்றதாகவும் 2 லட்சத்து 45 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

ஜி.சி.ஈ.உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் டிசெம்பர் மாதம் பெறுபேறுகளை வெளி யிடத் தீர்மானித்துள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.(50)

## நோர்வே தூதரகம் நடத்திய இசைப் பயிற்சிக் களங்களில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள்

அளவெட்டி, நவ.25

நோர்வேத் தூதரகம் இலங்கையில் நடத்திய இசைப்பயிற்சிக் களங்களில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 10 பேர் பங்குபற்றியுள்ளனர்.

இலங்கையில் இசையை விரிவுபடுத்தும் நோக்கில் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலிருந்தும் இசைத்துறை மாணவர்களைத் தெரிவு செய்து கொழும்பில் இந்தப் பயிற்சிக் களங்களை நோர்வேத் தூதரகம் நடத்தியிருந்தது.

இந்த இசைப்பயிற்சி களங்களில் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்களான எஸ்.மதுராங்கி, எஸ்.நிரூஜா, பி.நிலானி, ரி.சங்கீதா, ரி.கஜனி, பி.கஸ்தூரி, வை.காண்டீபன், எம்.துஸ்யந்தன், எஸ்.சிவரூபி, ஆர்.தாரணி ஆகியோரும் இசைத்துறைத் தலைவரான செல்வி பி.நடராஜாவும், விரிவுரையாளரான திருமதி கே.கருணாவும் பங்குபற்றியுள்ளனர் (202-23)

### நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 11 : | 26.11.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | மு.இ.08.53 வரை |
| நட்சத்திரம்: | விசாகம் |
| | முழுவதும் |
| சுபநேரம்: | 04.42 - 06.12 |
| ராகுகாலம்: | 12.12 - 01.42 |

### அகதிகளைத் திருப்பியனுப்ப முயற்சி என்ற

## கம்யூ. பாண்டியனின் பேச்சுக்கு தமிழக அரசு மறுப்புத் தெரிவிப்பு

இலங்கை அகதிகளைத் திரும்ப அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் பேசிய பேச்சுக்கு தமிழக அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யக்கோரி வேலூர் தமிழ்ச்சங்கம் சார்பில் வி.ஐ.டி. வேந்தர் விஸ்வநாதன் தலைமையில் கடந்த சனிக்கிழமை உண்ணாவிரதம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய சி.பி.ஐ. மாநில செயலாளர் தா.பாண்டியன், ''தமிழகத் தில் வாழும் 4.5 லட்சம் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்ப முடிவு செய்துள்ள திட்டத்தை ரத்து செய்ய வேண்டும்' - என்று கூறினார்.

தமிழக அரசு இது தொடர்பாக செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

அகதி முகாம்களில் தங்கி இருக்கும் இலங்கைத் தமிழர்களை திரும்பி செல்ல வேண்டுமென்று மத்திய அரசு அறிவித்துள்ளது என ஒரு கட்சியின் மாநிலச் செயலாளர் கூறியுள்ளமை அக்கட்சியின் நாளேட்டில் வந்துள்ளது.

அவர் அப்படி கூறியிருப்பது தவறான செய்தி மட்டுமல்லாமல் தமிழகத்தில் அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பீதியையும், கலக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியதாகும்.

தமிழ்நாட்டில் 115 முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள், தமிழ் நாடு அரசு மற்றும் இந்திய அரசு வழங்கி வரும் அனைத்து வகையான உதவிகளையும் பெற்று அமைதியாக வாழ்ந்து வருகின்றனர். எனவே அந்தச் செய்தியை தமிழக அரசு வன்மையாகக் கண்டிக்கிறது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத் திட்டங்களை கவனமாக மேற்கொள்க; திபெத் தலைவர்களுக்கு தலாய்லாமா எச்சரிக்கை

''எதிர்காலத் திட்டங்களை மிகக் கவன மாக மேற்கொள்ளவேண்டும். இல்லையெ னில் அடுத்த 20 ஆண்டுகளில், பெரும் ஆபத் தையும் அனர்த்தங்களையும் சந்திக்க நேரி டும்'' என ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா, திபெத் தலைவர்களுக்கு எச்சரிக்கை விடுத் துள்ளார்.



வட இந்தியாவில் புகலிடம் பெற்றுள்ள தலாய்லாமாவை, திபெத்துக்கு வெளியே தஞ்சம் புகுந்து வாழ்ந்துவரும் திபெத்தியத் தலைவர்கள் சந்தித்து கலந்தாலோசனை நடத்தினார்கள். இச்சந்திப்புக் கூட்டம் ஒரு வார காலம் நீடித்தது.

இதன் இறுதியில் தலாய்லாமா உரையாற் றுகையில் இந்த எச்சரிக்கையை விடுத்துள் ளார். அவர் தொடர்ந்து பேசுகையில், ''சீன அரசு மீதான எனது நம்பிக்கை தளர்ந்து விட்டது. எதிர்பார்ப்பு ஏமாற்றமளித்துள்ளது'' என்றும் கவலை தெரிவித்துள்ளார்.

''சீன அரசின் நடவடிக்கைகள் எவ்வாறா கவும் அமையலாம் . எனினும், சீன மக்கள் மீது எனக்கு எப்போதுமே நம்பிக்கையுண்டு. அவர்கள் நீதியின்பால் செயல்படுகிறார்கள். உண்மை நிலைப்பாட்டை உணர்கிறார்கள்'' என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

''சாதாரண சீன மக்களுடன் தாங்கள் கொண் டுள்ள தொடர்புகளையும் உறவுகளையும் திபெத்தியர்கள் மேம்படுத்திக்கொள்ள வேண்டும். எதிர்காலத் திட்டங்களை கவன மாக மேற்கொள்ளவேண்டும்'' என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஈராக்கில் குண்டுத் தாக்குதல் 18 பேர் பலி; பலர் காயம்

பக்தாத், நவ. 25

ஈராக்கிய தலைநகரான பக்தாத்தில் மக்கள் நடமாட்டம் மிகுந்த வேளையில் இடம் பெற்ற இரு குண்டுத் தாக்குதல்களில் 18 பேர் பலியாயினர். பலர் படுகாயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

கிழக்கு பக்தாத்தில், அரச ஊழியர்கள் பயணித்த மினிபஸ்ஸொன்று வீதியோரக் குண்டுவெடிப்பில் சிக்கியது. இதில் 13 பேர் பலியாயினர் என பாதுகாப்பு அதிகாரிகள் தெரி வித்தார்கள்.

அதியுயர் பாதுகாப்பு வலயமான பச்சை மண்டலப் பகுதியில் பெண் தற்கொலைக் குண்டுதாரியொருவர் மேற்கொண்ட குண் டுத் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

## கொங்கோவில் உணவுப்பொருள் விலை ஏற்றம் கிளர்ச்சிக் குழுக்கள் மீது மக்கள் கடும் விசனம்

இன்ஸாஸா, நவ. 25

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் அடிப் படை உணவுப் பண்டங்களின் விலைகள் எகிறி வருகின்றமைக்கு கிளர்ச்சிப் போராட் டக் குழுக்களே காரணமாகும் என உதவி அமைப்புகள் பரவலாக முறைப்பாடு தெரி வித்து வருகின்றன.

கிளர்ச்சிப் போராட்டக் குழுக்கள் வர்த்தக நிறுவனங்களையும் அரச நிறுவனங்களை யும் துப்பாக்கி முனையில் மிரட்டிப் பணம் பறித்து வருகின்றன. அபரிமிதமான விலை யேற்றத்துக்கு இதுவே காரணமாகும் என்றும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

கிளர்ச்சிப்படைத் தளபதி லோரண்ட் இன்குண்டாவின் ஆள்கள், தம் பகுதிகளுக் குள் வந்து செல்லும் வாகனங்களிடம் பெரும் கட்டணங்களை அறவிட்டு வருகின்றார்கள். மிரட்டியும் பணம் பறிக்கின்றார்கள் என்றும் இந்த அமைப்புகள் விவரித்துள்ளன.

அடாவடித்தனமான கட்டண வசூலிப்பு, மிரட்டலோடு கூடிய பணம் பறிப்பு ஆகிய வற்றால் சோளம், கடலை, பருப்பு ஆகிய ஆகார உணவுப் பண்டங்களின் விலைகள் கடந்த ஆண்டைவிட இரட்டிப்பாகிவிட்டன என ஐ.நா. அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

போராளிகளின் நிர்வாகத்துக்காகவே பணம் அறவிடப்படுகிறது. இது தவிர்க்க முடியாததொன்று என கிளர்ச்சிப்படைத் தளபதி லோரண்ட் இன்குண்டா இவற்றுக் குக் காரணம் கூறிவருகிறார் என்றும் அவர் கள் தெரிவித்துள்ளார்கள்.

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துள்ளன. பல பகுதிகளில் கிளர்ச்சிக் குழுக்களின் ஆதிக் கம் மேலோங்கியுள்ளது. அரச படைகளுக்கும் கிளர்ச்சிக் குழுக்களுக்குமிடையே மோதல் கள் மூண்டு வருகின்றன என உதவி அமைப்பு கள் மேலும் விளக்கியுள்ளன.




## மதுபாவனைக்கு எதிரான பிரசாரத்துக்கு பிரிட்டிஷ் அரசு 225 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

மதுப் பாவனையால் ஈரல் நோய் தாக்கி உயிர் இழப்பவர்களின் எண்ணிக்கை பிரிட் டனில் அதிகரித்து வருவதையொட்டி,மது பாவனைக்கு எதிரான பிரசாரத்துக்காக பிரிட் டிஷ் அரசு, 225 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்ய முன்வந்துள்ளது.

1991 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் அதிக மதுப்பாவனையால் 8758 பேர் மடிந்துள் ளனர். இவர்களில் பெரும்பாலானோர் 40 வயது முதல் 50 வயதுக்கு உட்பட்டவர்களா வர். இவர்கள் ஈரல் நோயால் அவதிப்பட்டு வந்தவர்கள்.

அதேவேளை, 25 வயது முதல் 29 வயதுக்கு உட்பட்டவர்களில் அளவுக்கதிக மதுபாவனையால் உயிர்நீத்தோரின் எண் ணிக்கை, 2006 ஆம் ஆண்டில் 40 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதையொட்டி, மதுப்பாவனைக்கு எதிரான பிரசாரத்தை முழு வீச்சில் மேற்கொள்வதற் காக பிரிட்டிஷ் அரசு, 225 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்ய திட்டமிட்டுள்ளது.

மதுபான விடுதிகளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தள்ளுபடி விலையில் மதுபான விற் பனை இடம்பெற்று வருகிறது. இதை (ஹெப்பி ஹவர்) குதூகல நேரம் என அழைக்கின்ற னர். இந்த குதூகல நேரத்தை இரத்துச் செய் வது தொடர்பாகவும் பிரிட்டிஷ் அரசு பரிசீ லித்து வருகிறது.

## பலஸ்தீனத்தில் முன்கூட்டியே தேர்தல் நடத்த ஜனாதிபதி விருப்பம்

பலஸ்தீன், நவ. 25

பலஸ்தீன நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான எண்ணம் தமக்கு உண்டு என பலஸ்தீன ஜனாதிபதி முஹமத் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

போட்டிக் குழுவான ஹமாஸுடன் நான் இணக்கப் பேச்சுகளை மேற்கொண்டுள் ளேன். இவ்வாண்டு இவற்றில் முன்னேற்றம் ஏற்படக்கூடுமென்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்துள்ளார்.

பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்படாத பட் சத்தில் ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றிற்கான திகதிகள் நிர் ணயிக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கான அதிகாரத்தைப் பயன் படுத்தி புதுவருட ஆரம்பத்திலேயே தேர்தல் களுக்கான ஆணையை நான் பிறப்பிப்பேன் என்றும் அப்பாஸ் குறிப்பிட்டுள்ளார்.

முஹமத் அப்பாஸின் பதவிக் காலம் எதிர்வரும் ஜனவரி ஒன்பதாம் திகதியுடன் முடிவடைகிறது. எனினும், ஹமாஸ் தலை மையிலான நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடையும் வரை மேலும் ஓராண்டுக் காலம் அவர் பதவியில் நீடிக்கக்கூடுமென அரசியல் அவதானிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதேவேளை, அப்பாஸின் பதவிக் கால நீடிப்பு அங்கீகரிக்கப்பட மாட்டாது என ஹமாஸ் இயக்கம் ஏற்கனவே அறிவித்திருக் கின்றது. அதுபோல முன்கூட்டியே நாடாளு மன்றத் தேர்தல் நடத்தப்படுவதற்கும் அது எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

## ஐஸ்லாந்து நாட்டுப் பிரதமரை பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டம்

ரொய்க்ஜாவிக், நவ. 25

ஐஸ்லாந்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள், பிரதமர் கெய்ர் ஹார்டே, மத்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் ஆகியோர் பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதைத் தடுக்க முயன்ற பொலிஸாருடன் அவர்கள் மோதலில் ஈடுபட்டனர்.

ஐரோப்பாவில் வட அட்லாண்டியக் பெருங்கடலிலுள்ள தீவு நாடான ஐஸ்லாந்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக 3 வங்கிகள் திவாலாயின. இதனால், பல நிறுவனங் களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை இழந்தனர். இலட்சக்கணக்கானவர் களுக்கு வேலை கிடைக்கவில்லை.

பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்காக அந்த நாடு சர்வதேச நிதி நிறுவனத்திடமும் (ஐ.எம்.எப்.) மற்ற நாடுகளிடமும் 210 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கி உள்ளது. எனினும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இதனால், பிரதமர் கெய்ர் ஹார்டே, ரிசர்வ் வங்கி ஆளுநர் டேவிட் ஓட்சன் ஆகியோர் பதவி விலகவேண்டும் என்று கோரி ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக அவர்கள் மீது தண்ணீரை பொலிஸார் பீய்ச்சி அடித்தனர். இதை எதிர்த்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். இதில் பொலிஸ் நிலையத்தின் ஜன்னல்கள் உடைந்தன.

## கினியா - பிஸ்ஸூ நாட்டில் இராணுவப் புரட்சி முறியடிப்பு

பிஸ்ஸௌ, நவ. 25

மேற்கு ஆபிரிக்க நாடான கினியா - பிஸ் ஸூவில் சனிக்கிழமை நடைபெற்ற இராணு வப் புரட்சி முறியடிக்கப்பட்டது.

ஜனாதிபதி ஜோ பெர்னார்டோ வியராவின் மாளிகைக்குள் நள்ளிரவு புகுந்த அதிருப்தி இராணுவச் சிப்பாய்கள், ஜனாதிபதி மாளி கையை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர்.

அப்போது, ஜனாதிபதி ஆதரவு இராணு வத்திற்கும், அதிருப்தி சிப்பாய்களுக்கும் இடையே சுமார் 3 மணி நேரம் சண்டை நடை பெற்றது. இறுதியில் அதிருப்தி சிப்பாய்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.



இந்தச் சண்டையில் ஜனாதிபதிக்கோ, அவரது குடும்பத்தினருக்கோ எவ்வித பாதிப்பும் இல்லை என்று அந்நாட்டு உள் துறை அமைச்சர் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் உளவு அமைப்பின் அரசியல் பிரிவு திடீர் கலைப்பு

இஸ்லாமாபாத், நவ. 25

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ். ஐயின் அரசியல் பிரிவு கலைக்கப்பட்டுவிட் டது. இந்த அமைப்பே அரசியல்வாதிகளை உளவு பார்ப்பது, தேர்தல்களில் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்தது.

ஐ.எஸ்.ஐயின் பணி தற்போது உள்நாட்டு அரசியலில் ஈடுபடுவதிலிருந்து உள்நாட்டு பாதுகாப்புக்கு மாற்றப்பட்டுள்ளது.

உள்நாட்டு பாதுகாப்புக்கு ஆபத்தான தீவிரவாதத்துக்கு எதிரான போரில் இந்த அமைப்பு கவனம் செலுத்தும் என்று ஓர் அதி காரி கூறினார்.

## டிசம்பர் 29 ஆம் திகதி பங்களாதேஷ் தேர்தல்

பங்களாதேஷ் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி நடத் தப்படும் என தலைமை தேர்தல் ஆணையர் சம்சுல் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி தேர்தல் நடத்த முன்னர் முடிவு செய்யப்பட்டது. ஆனால், இத் திகதியில் தேர்தல் நடத்த முன்னாள் பிரதமர் காலிதா ஷியா கடும் எதிர்ப்பு தெரிவித்திருந் தார். அந்த நாளில் தேர்தல் நடத்தினால் அத னைப் புறக்கணிப்போம் என்றும் எச்சரித் திருந்தார்.

இதையடுத்து, இடைக்கால அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி தேர்தல் திகதி மாற்றப்பட்டுள்ளது.

## சுமாத்திரா தீவில் பூகம்பம்

ஜகார்த்தா, நவ. 25

இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவில் சனிக்கிழமை நள்ளிரவு கடும் பூகம்பம் தாக்கியது. இந்த பூகம்பத்தைத் தொடர்ந்து அங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அடுத்தடுத்து நிலநடுக்கங்கள் தாக்கின.

சனிக்கிழமை இரவு 11 மணிக்கு தாக்கிய இந்த பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவு கோளில் 6.8 புள்ளிகளாக பதிவாகியுள்ளது என இந்தோனேஷிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதைத் தொடர்ந்து 10 நிமிடங்களில் ரிச்டர் அளவுகோளில் 5.7 புள்ளிகள் என்ற அளவி லும், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு ரிச்டர் அளவுகோளில் 5... புள்ளிகள் என்ற அளவிலும் நிலநடுக்கங்கள் தாக்கின.

## மனித மூளை போல் செயற்படும் கணினியை உருவாக்க நடவடிக்கை

நியூயோர்க், நவ. 25

மனித மூளையைப் போலவே செயற்படும் அதிசக்தி படைத்த கணினியை உருவாக்க் அமெரிக்காவிலுள்ள ஐ.பி.எம். கணினி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்குத் தேவையான பண உதவியை அமெரிக்கப் பாதுகாப்புத்துறை வழங்கவுள்ளது. முதற்கட்டமாக பாதுகாப்புத்துறை இதற்காக ரூபா 75 ஆயிரம் கோடி வழங்கி உள்ளது. ஐ.பி.எம். நிறுவன பொறியியலாளர்களும் அமெரிக்காவிலுள்ள 5 பல்கலைக்கழக பேராசிரியர்களும் இதை உருவாக்கும் பணியில் ஈடுபடவுள்ளனர். இவர்களுக்கு மூளை நரம்பியல் டாக்டர்கள், மனோதத்துவ நிபுணர்கள் உதவிகளைச் செய்வார்கள்.

மனித மூளை செல்கள் எப்படி செயல்படுகின்றன, நரம்புகள் எப்படி இயங்குகின்றன ஆகியவற்றை முழுமையாக ஆய்வு செய்து அதன் அடிப்படையில் இந்தக் கணினி உருவாக்கப்படவுள்ளது.

எனினும், இந்தக் கணினியை உருவாக்க எவ்வளவு காலம் ஆகும் என்று கால நிர்ணயம் எதுவும் செய்யப்படவில்லை. ஒவ்வொரு கட்டமாக ஆராய்ச்சி செய்துதான் இதனை உருவாக்க முடியும். பல ஆண்டுகள் கூட ஆகலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வகுப்பறையில் உள்ள ஒவ்வொரு மாணவன் மீதும் ஆசிரியர்கள் அக்கறை காட்டுவது மிக அவசியம்

பாடசாலை என்பது அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு கூட்டு நிறுவனமாகும். இந்நிலையில் பாடசாலையில் பயனளிப்போர், பயன் பெறுவோர் எல்லோரும் 'எமது செயற்பாடுகளை எவ்வாறு வினைத்திறனுடைய தாக்குவோம்' என்னும் சிந்தனையைக் கருத்திற்கொண்டு தமது செயற்பாடுகளைத் திட்டமிடுவதன் மூலம் உச்சப் பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும்.



பிள்ளைகளின் அறிவு, ஆற்றல், உளச் சார்புத் தேவைகள் என்பவற்றிற்குப் பொருத்தமான வழி காட்டல்களை மேற்கொள்வது அவசியம். வகுப்பறையில் உள்ள ஒவ்வொரு மாணவனின் நலனிலும் அக்கறைகொண்டு அவர்களின் உள ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான அனுபவங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். மீத்திறன் மாணவர்களை நோக்காகக் கொண்டு கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளாது, வகுப்பறையிலுள்ள அனைத்து மாணவர்களினதும் அடிப்படை ஆற்றல்களை விருத்தி செய்வதை நோக்காகக்கொண்டு திட்டமிடல் அதிக விளைவைத்தரும்.




பாடசாலையின் எந்த ஒரு செயற்பாட்டினதும் இறுதிப் பெறுபேறு உயர்வானதாகவும், தரமானதாகவும் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் செயற்படல் நல்விருத்தியை ஏற்படுத்தினாலும் இதற்கு முழு மாணவர்களையும் இயன்றவரை பயன்படுத்துவதன் மூலம் எல்லோருக்கும் அது பற்றிய அனுபவக் கற்றலைப் பெறச் செய்யலாம். அதன் மூலம் உயர்மட்ட இலக்குகளை அடைய முடியும். முதலாந் தரத்திலிருந்து பதினொராம் தரம்வரை ஒரு பிள்ளை கல்வி கற்பதற்கு உரிமையுடையவன். இத்தகைய பதினொரு வருடக் கல்வியைப் பாடசாலை சென்றும் பெறத் தவறிய பிள்ளையின் எதிர்காலத்தைப் பாடசாலையும் அவனைச் சூழ்ந்த சமூகமுமே வகை கூறவேண்டியுள்ளது.

வளர்ச்சியடைந்து வரும் கல்வியுலகில் மாணவர் ஒவ்வொருவரினதும் நலனிலும் அக்கறைகொண்டு அவர்களின் உள ஆற்றல்களை விருத்தி செய்ய வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றை மையமாகக் கொண்டு பாடசாலை கற்றல், கற்பித்தல் செயன்முறையினை மேற்கொள்வதை விடுத்து, சராசரிப்புள்ளிக்கு மேல் உள்ள மாணவர்களின் அறிவுசார் திறன்களை மேம்படுத்துதலோடு, சராசரிப் புள்ளிக்குக் கீழ் உள்ள மாணவர்களைச் சராசரிப்புள்ளியை அண்மிக்கச் செய்வதன் மூலம் எல்லா மாணவர்களையும் குறிப்பிட்ட தேர்ச்சி மட்டத்தை எய்த வைக்க முடியும். இதன்மூலம் தேசிய பரீட்சைகளான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, தரம் ஒன்பது மாகாண மட்டப் பரீட்சை, ஜீ.சி.ஈ சாதாரணதரப் பரீட்சை போன்ற பரீட்சைப் பெறுபேறுகளின் அடைவு மட்டத்தை உயர்த்த முடியும்.

### முதலில் மாணவர்களை விளங்கிக்கொள்ளவேண்டும்

மாணவர்களை முழுமையான மனிதர்களாக உருவாக்கும் ஆசிரியர்களின் பெரும் பணியில் முதலில் அவர்கள் மாணவர்களை விளங்கிக்கொள்ள வேண்டும். அவர்களின் பிரச்சினைக்கான மூலங்களை அறிந்து அதற்குரிய தீர்விற்கான முயற்சிகளை முன்வைத்து, சாதகமான உறவு நிலைகளை ஏற்படுத்துதல் அவசியம். அவர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்களை மிக நுணுக்கமாக இனங்கண்டு அதற்கான துவம் வழங்குவதன் மூலம், தன் சகபாடிகள் தன்னுடைய கருத்தினை ஏற்றுக் கொள்கின்றனர் என்பதுடன், ஆசிரியர் தங்கள் ஒவ்வொருவரிலும் அக்கறையுடன் செயற்படுகின்றார் என்ற நம்பிக்கை மாணவர்களுக்கு ஏற்படும்.

கற்றலின் போது இடர்பாட்டை எதிர்

செல்வி.சி.சகுந்தலா
ஆசிரியை

நோக்கும் பிள்ளைகளின் பெற்றோருடன் தொடர்புகளை வலுப்படுத்துவதன் மூலம் அம்மாணவர்களின் கற்றலில் விருப்பமின்மைக்கான காரணங்களை இனங்கண்டு அதற்கேற்ற கற்பித்தல் அணுகுமுறையினை மேற்கொள்ள முடியும்.

பாடசாலை மட்டத்தில் தரவட்டங்களை அமைத்து, அத்தரவட்டங்கள் மூலம் மாணவர்களின் தேர்ச்சி மட்டம், சித்தி வீதம் போன்ற விடயங்கள் பற்றிய பகுப்பாய்வினை மேற்கொண்டு அதற்கான காரணங்களை இனங்கண்டு பரிகார நடவடிக்கையினை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இதன்மூலம் வினைத்திறனுடையதாகக் கற்றல், கற்பித்தல் அமைவதுடன் ஆளுமைச் சிதைவற்ற சிறந்த நன் மாணவர்களை உருவாக்க முடியும்.

## மாணவர்களின் இலக்குகள் அடையப்படும்போது ஆசிரியர்களின் கற்பித்தல் வெற்றி பெறுகிறது

பரிகார நடவடிக்கையினை மேற்கொள்வதன் மூலம் ஆசிரியர், மாணவர் தொடர்பு வினைத்திறனுடையதாக அமைக்கலாம். இதன் மூலம் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையினைக் கட்டியெழுப்பலாம்.

வகுப்பறைச் செயற்பாட்டின்போது மாணவர் அனைவரினதும் கருத்திற்கு மதிப்பளித்தல் வேண்டும். சிறு விடயமாயினும் சிறந்ததாக அமையின் அதனைத் தட்டிக் கொடுப்பதன் மூலம் எல்லோரிடமும் தான் நன்மதிப்பைப் பெறுகின்றேன் என்ற உணர்வினை ஒவ்வொரு மாணவரிடமும் ஏற்படுத்தல் வேண்டும். குழுநிலைச் செயற்பாட்டின்போது எல்லோருக்கும் சுழற்சி முறையில் தலைமைத்

கற்றல், கற்பித்தல் செயன்முறை வினைத்திறனுடையதாக அமைந்தால் மாத்திரமே மாணவர் அனைவரையும் உரிய இலக்கினை எய்த வைக்க முடியும். இதற்கு ஆசிரியர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடனும், சேவை மனப்பாங்குடனும் எவரது வற்புறுத்தல்களுக்காகவன்றி மனநிறைவுடன் தமது சேவையினை மேற்கொள்வதன் மூலம் அவர்களின் இலக்குகளை அடைய வைக்க முடியும். இல்லையெனில் ஆசிரியர்கள் பெறுகின்ற பயிற்சிகளும், பட்டப்பின் பட்டங்களும் பதவியுயர்வுக்காகவன்றிப் பயனுறுதியுடைய கற்பித்தலை மேற்கொள்ளவல்ல என்ற [illegible] பிற்கு ஆளாக வேண்டி ஏற்படும்

***

# சுலபமான முறையில் பிரச்சினைகளைத் தீர்த்து சரியான இலக்கினை அடைவதற்கு வழிவகுக்கும் 'தரவட்டங்கள்'

நிறுவனமொன்றில் அல்லது பாடசாலையில் பணியாற்றும் ஆளணியினர் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அல்லது சவால்களுக்கு முகங்கொடுத்து அவற்றை வெற்றி கொள்வதற்கான தீர்வுகளைக் கண்டறிந்து உரிய செயற்றிட்டங்களை செயற்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்படும் அமைப்பு தரவட்டம் (Quality Circles) எனப்படும்.

1952 ஆம் ஆண்டில் பொருளுற்பத்தி முகாமைத்துவம் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட இத்தரவட்டம், தற்போது உலகின் பல நாடுகளிலும், தொழில் நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும் வெற்றிகரமாகச்.செயற்படுகின்றன. பாடசாலைகளின் சிறந்த கற்பித்தல் செயற்பாடுகளுக்கு தரவட்டங்களின் பயன்பாடு அவசியமென்ற நிலையில் சென்றாண்டு இலங்கையிலுள்ள எல்லாப் பாடசாலைகளுக்கும் இது அறி

வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்
அதிபர்/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

முகஞ்செய்யப்பட்டது.

பாடசாலைகளில் இவ்வமைப்பை உருவாக்கி அதனூடாகப் பிரச்சினைகள் கையாளப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலைகளின் பண்புசார் விருத்தியினை மதிப்பீடு செய்யும்போது தரவட்டங்களின் செயற்பாடுகளும் கவனிக்கப்படுகின்றன. ஆசிரியர்கள் குழுவாக இயங்கி பாடசாலையில் தாம் மேற்கொள்ளும் கருமங்களில் ஏற்படக்கூடிய இடர்பாடுகளை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வுகளைச் செயற்படுத்திச் சிக்கல்களை விடுத்து தமது கற்பித்தல் செயற்பாடுகளை வலுவுள்ளதாக்கத் தரவட்டம் உதவுமெனக் கருதப்படுகின்றது.

தரவட்டம் ஒன்றினைஉருவாக்கும்போதும் பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

1.உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தது ஐந்து பேராகவும் கூடியது பன்னிரண்டாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

2.தரவட்டம் ஒன்றில் தலைவர், உப தலைவர், செயலாளர் என்போர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

3.குறித்த ஒரு பிரச்சினைக்காக உருவாக்கப்படும் தரவட்டம் அப்பிரச்சனைக்குத் தீர்வு கண்டதும் கலைந்துபோகும்.

4.சகல அங்கத்தவர்களும் தரவட்டம் தொடர்பான அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.

இந்தவகையில் பாடசாலைகளில் பாடங்கள் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பாடரீதியான தரவட்டங்களும் பாடசாலையின் செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகக் குறித்த பிரச்சினைகள் தொடர்பான தரவட்டங்களும் உருவாக்கப்படுகின்றன. பாடரீதியான தரவட்டங்கள் தொடர்ந்து செயற்பட குறித்த பிரச்சினைக்காக உருவாக்கப்பட்ட தரவட்டம் தீர்வு காணப்பட்டதும் கலைக்கப்படலாம். தரவட்டமானது ஆசிரியர்களின் செயற்பாடுகளுக்கு ஊக்கமும், விருத்தியும் கொடுப்பதாக அமையும். அவர்களின் பிரச்சினைகளையும் [illegible] அதற்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும் போது மன மகிழ்வுடனும் திருப்தியுடனும் தம் பணிகளைச் செய்யும் மனநிலை உருவாகும்.

### பல விதங்களில் அனுகூலம்

முகாமைத்துவத்துடன் இணக்கமாகவும், இசைவாகவும் செயற்படவும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பலரின் ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் பெறவும், அனைவரது பங்குபற்றலைத் தூண்டவும், முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்கவும், ஆளணியினரிடையே மறைந்துள்ள ஆற்றல்களை வெளிக்கொணரவும், பொது இலக்கு நோக்கிய பயணத்துக்கு ஆதரவுபெறவும், தமக்கிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் எனப்பல நிலைகளில் தரவட்டம் அனுகூலமான பயன்களைத் தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மனிதவள உச்சப்பயன்பாட்டில் பாடசாலைகளில் பணிபுரிவோரிடையே நேர் மனப்பாங்கினை வளர்ப்பதற்குத் தரவட்டச் செயற்பாடுகள் உதவுகின்றன. தரவட்டத்தில் சகலரும் ஒன்றிணைந்து தீர்மானம் எடுப்பதால் தம்மிடையே புரிந்துணர்வுடன் பணி செய்ய முடியும். தீர்மானங்கள் சேர்ந்து எடுக்கப்படுவதால் ஒருவருக்கொருவர் தாழ்வுணர்ச்சியின்றித் தொழிற்பட வாய்ப்புண்டாகின்றது. பாடசாலை மீது ஆசிரியர்களுக்கான பற்றுணர்வும் உழைக்கும் திறன் ஆற்றலும் வளர்ச்சியடையும்.

எனவேதான் பாடசாலைகள் தரவட்டங்களை அமைத்துக் கொள்வதன் மூலம் இலகுவாகவும், விரைவாகவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுக்கண்டு சுலபமான முறையில் தமது இலக்கினை நோக்கி முன்னேற முடியுமெனக் கல்வியியலாளர்கள் கருதுகின்றார்கள்.

***



உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி அடைந்த மாணவ, மாணவிகளைப் படத்தில் காணலாம். நீண்ட காலத்தின் பின்னர் கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் (48 மாணவர்கள்) இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
(படம்:நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி

# அனல் பறந்த இறுதியாட்டத்தில் சம்பியனானது தேவரையாளி இந்துக்கல்லூரி

வலி.வடக்கு, நவ.25

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் இளையோர் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கரவெட்டி தேவரயாளி இந்துக்கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.


ஹரிசோன்


தனுஜன்


துசிகரன்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியும், யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பித்தது முதலே இரு அணி வீரர்களும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிப்பதுபோல மோதிக்கொண்டனர்.

முதல்பாதி ஆட்டத்தில் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்திற்கு கோல்கள் பெறும் வாய்ப்புகள் அதிகம் காணப்பட்ட போதிலும் முன்னணி வீரர்கள் அதனைத் தவறவிட்டார்கள்.

தேவரையாளி இந்துக்கல்லூரி தடுத்து விளையாடுவதிலேயே குறியாய் இருந்தது. இதனால் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் கோல்கள் பெற்றே ஆக வேண்டும் என்ற வெறியோடு மோதிக்கொண்டார்கள். இதனால் இரு அணி வீரர்களின் ஆட்டத்திலும் அனல் பறந்தது. இதனால் ஆட்டம் கோல் எதுவும் பெறாத நிலையில் முடிவுறுமோ என்ற எண்ணம் பார்வையாளர்களுக்கு ஏற்பட்டது. இந்த எண்ணத்தை தவிடு பொடியாக்கி ஆட்டம் நிறைவுபெற 07 நிமிடங்கள் இருக்கும் வேளையில் தேவரையாளி இந்துக்கல்லூரி வீரன் துசி கரன் தனக்குக் கிடைத்த பந்தை உரிய முறையில் பயன்படுத்தி ஒரு கோலைப் பெற்றுக்கொண்டார். இதற்குப் பதிலடியாக அடுத்த 02ஆவது நிமிடத்தில் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய வீரன் ஹரிசோன் தனது அணிக்கான கோலைப் பெற்று சம நிலைப்படுத்திக் கொண்டதைத் தொடர்ந்து போட்டி விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது.

எனினும் ஆட்டம் முடிவடைய 02 நிமிடம் இருக்கும் நிலையில் தேவரயாளி இந்துக்கல்லூரி வீரன் தனுஜன் ஒரு கோலைப் பெற்று தனது அணியை முன்னிலைக்கு கொண்டு வந்தார்.

அதனைத் தொடர்ந்து சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய வீரர்கள் கோல் ஒன்றைப் பெறுவதற்கு கடும் பிரயத்தனம் மேற்கொண்ட போதும் தேவரயாளி அணி வீரர்கள் தடுத்து விளையாடி அம்முயற்சியை முறியடித்தனர். இதனால் ஆட்டமுடிவில் தேவரயாளி இந்துக்கல்லூரி 02:01 என்ற கோல்கணக்கில் யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தை வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும், யாழ்ப்பாணம் சென்.சாள்ஸ் மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 03:00 என்ற கோல்கள் கணக்கில் சென்.சாள்ஸ் மகாவித்தியாலயத்தை இலகுவாக வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (04-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



புலோலி கந்தமுருகேசனார் முன்பள்ளி விளையாட்டு விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிராமசேவை உத்தியோகத்தர் பீ.தயாநிதி, முன்பள்ளிச் சிறுவர்களுக்குப் பரிசில் வழங்குகிறார். முன்பள்ளி ஆசிரியை செல்வி.மதுராந்தகி பாலச்சந்திரனும் காணப்படுகிறார். (218)

# வீரர்களின் ஒருங்கிணைந்த ஆட்டத்தால் வெற்றியைத் தனதாக்கியது நெல்லியடி ம.ம.வி.

யாழ்ப்பாணம்,நவ.25

13 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டப் போட்டியில் நெல்லியடி ம.ம.வித்தியாலய அணியும் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அணியும் மோதிக்கொண்டன. நெல்லியடி ம.ம.வி.மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய் நெல்லியடி ம.ம.வி. அணி தனது முதல் இன்னிங்ஸில் 160 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பில் அனுசாந் 29 ஓட்டங்களையும், சயந்தன் 23 ஓட்டங்களையும், மலரவன் 26 ஓட்டங்களையும், இந்துஜன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வீரர்களான நிலக்ஷன் 4 விக்கெட்டுக்களையும், சஞ்சீவன் 3 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

தனது முதல் இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அ.மி.கல்லூரி 116 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அந்த அணி சார்பில் நிரோஜன் 34 ஓட்டங்களையும், சஞ்சீவன் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் நெல்லியடி ம.ம.வி.சார்பில் தனுஜன் 4 விக்கெட்டுக்களையும், சயந்தன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி ம.ம.வி. அணி 53 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தி, உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அணியை இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடும்படி பணித்தது.

நெல்லியடி ம.ம.வி. அணி சார்பில் இந்துஜன் 17 ஓட்டங்களையும், கோகுலராஜ 11 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அ.மி.கல்லூரி 3 விக்கெட் இழப்பிற்கு 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்ட நேரம் முடிவுற்றது. அந்த அணி சார்பில் பிரசாந்தன் 15 ஓட்டங்களையும், பிரணவன் 22 ஓட்டங்களையும், நிரோஜன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனால் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றிருந்த நெல்லியடி ம.ம.வி.அணி வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது. (04)



மாகாண மட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று, தேசியமட்டப் போட்டிகளில் கலந்துகொண்ட புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் 19 வயது கரப்பந்தாட்ட அணியினரை முதலாவது படத்திலும், மாகாணமட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்ற புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரியின் 13 வயது கரப்பந்தாட்ட அணியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். வீரர்களோடு பாடசாலை அதிபர், எஸ்.மகேஸ்வரதாசன், பொறுப்பாசிரியர்கள் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# வலிகாமம் வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் தடகளப் போட்டி முடிவுகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இடையே இடம்பெற்ற தடகள விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**08 வயதுப் பிரிவு**

50 மீற்றர் ஓட்டம்:

சு.சுகிர்தன் (ஏழாலை தெற்கு அ.மி.த.க.பா.), ஏ.நிதர்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை) நே.யூலியட்டி றோசான் (உடுவில் மகளிர் கல்லூரி)

75 மீற்றர் ஓட்டம்

ர.நிதர்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பா.) உ.ஜானுஷன் (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி) நே.யூலியட்டி றோசான் (உடுவில் மகளிர் கல்லூரி)

நின்று நீளம் பாய்தல்:

ஆ.லவகீசன் (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி) பு.சாருசன் (மல்லாகம் குளமங்காம் றோ.க.பா.) நி.தரஞ்சன் (இளவாலை மெய்கண்டான் வித்தி.)

குறிபார்த்து எறிதல்:

த.தர்சிகன் (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) நா.சாரங்கன் (தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி) பா.மிசோதன் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி.)

பெரிய பந்து எறிதல்:

த.கேதுஜன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பா.) ஜெ.லதூசன் (ஏழாலை தெற்கு அ.மி.த.க.பா.) யோ.பஸ்ரியன் ராஜ்குமார் (சில்லாலை றோ.க.த.க.பாட)

**10 வயதுப் பிரிவு -**

50 மீற்றர் ஓட்டம்:

நி.சிந்துஜன் (வட்டு. இந்துக்கல்லூரி), உ.வசந் (உடுவில் மகளிர் கல்லூரி), அ.ஜெனியோய் (இளவாலை மாரீசன் கூடல் றோ.க.த.க.பா.)

75 மீற்றர் ஓட்டம்:

அ.ஜெனியோய் (இளவாலை மாரீசன் கூடல் றோ.க.த.க.பா.) க.பானுஜன் (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி) ச.விலக்ஷன் (சங்கானை சிவப்பிரகாசம் வித்தி.)

நின்று நீளம் பாய்தல்:

ம.டிலக்ஷன் (உடுவில் முருகமூர்த்தி வித்தி.) பு.சரவணன (தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தி.)அ.றொசான் (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி.)

குறிபார்த்து எறிதல்:

இ.சிந்துஜன் (சங்கரத்தை சின்னம்மா வித்தி.) ர.சுதர்சன் (மல்லாகம் விசாலட்சி வித்தியாலயம்) சி.லுஜித் (உடுவில் மான்ஸ் வித்தி.)

பெரியபந்து எறிதல்:

வ.வசீபன் (குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தி.), செ.சஜீபன் (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தி.) பு.பிரகாணன் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.)

**11 வயதுப் பிரிவு -**

75 மீற்றர் ஓட்டம்:

செ.அனுஷாந் (அராலி இந்துக் கல்லூரி), ச.ஜீவகரன் (அராலி கிழக்கு அ.மி.த.க.பா.) தே.கொலின்சன் (உடுவில் முருகமூர்த்தி வித்தி.)

100 மீற்றர் ஓட்டம்:

செ.அனுஷாந் (அராலி இந்துக் கல்லூரி), தி.நிதர்சன் (மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம்), ந.கார்த்தீபன் (அளவெட்டி சீனன் கலட்டி வித்தியாலயம்)

நீளம் பாய்தல்:

நி.டிலகேஸ்வரன் (உடுவில் மகளிர் கல்லூரி), ஏ.மதுர்ஷன் (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி.), ம.தனுஷன் (வயாவிளான் மத்திய மகா வித்தி.)

உயரம் பாய்தல்:

தி.கார்த்திக் (அராலி சரஸ்வதி மகா வித்தி.), ப.சஞ்சீவன் (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி.), ம.சசீபன் (அராலி இந்துக் கல்லூரி)

பெரிய பந்து எறிதல்:

த.யதுர்ஷன் (உடுவில் மகளிர் கல்லூரி), சே.ஸரெனின்ராஜ் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி) சி.ஜெனிஸ் (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி.)

4×50 மீற்றர் தடை தாண்டல்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம், அராலி இந்துக்கல்லூரி. (04-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர்

Prepared: by V. NAVAMOHAN - Colombo.

## Special Guidance for O/L 2008 Students

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008

E / 31 / I **ENGLISH LANGUAGE** One hour

### Part I

1. Read the contents page of the Telephone Directory given below.

**EMERGENCY NUMBERS**

| | |
|---|---|
| POLICE | 433333 |
| GENERAL HOSPITAL | 691111 |
| FIRE AND AMBULANCE | 422222 |

**TOURIST INFORMATION**

TOURIST INFORMATION CENTRES

| | |
|---|---|
| COLOMBO | 437055 |
| AIRPORT | 452866 |
| TOURIST POLICE | 426611 |
| IMMIGRATION & EMIGRATION COLOMBO | 435373 |
| CUSTOMS COLOMBO | 421141 |
| RAILWAY TOURIST OFFICE COLOMBO | 435838 |
| SRI LANKA TRANSPORT BOARD | 328081 |
| CULTURAL TRIANGLE OFFICE | 587912 |

Now write down the number you would dial in the following situations in the given cage.

(1) You see a man snatching a lady's chain and running away.

(2) You want to get a passport to go abroad.

(3) You see a cloud of smoke coming out of a tea boutique in the neighbourhood.

(4) You want to know when a flight is due from Singapore.

(5) You want to book buses for a school trip.

(5 mts - 5 Marks)

2. Read how the following students of Hindu college fared at the last G.C.E.(O/L) Exam, and answer the questio  ven below.

NOTE -WELL-

D - Distinction pass
C - Credit pass
S - Simple pass
F - Failure

| NAME | RELIGION | LANGUAGE | ENGLISH | SCIENCE | MATHS | SOCIAL STUDIES | ART | COMMERCE |
|---|---|---|---|---|---|---|---|---|
| SRILAL | D | D | D | D | C | D | C | D |
| RAVI | C | D | D | C | F | C | S | S |
| GAJAN | S | C | D | S | F | D | C | S |
| ANAND | C | S | C | F | F | S | S | F |
| SURESH | C | D | C | C | D | C | C | C |
| VICTOR | D | C | C | F | S | C | C | S |
| IVAN | F | C | D | C | F | S | F | C |
| IMRAN | C | C | C | S | S | C | S | C |

a. Who has done best at the exam?
b. How many students have failed in science?
c. Who has fared worst at the exam?
d. Which subjects seem to have been most difficult for the students?
e. How many students have failed to get distinctions in English?

(5 mts - 5 Marks)

3. Read the following instructions for keeping your teeth and hair healthy. But they are mixed up. Put them in the correct columns of 'HEALTHY TEETH' and 'HEALTHY HAIR'. Write the LETTER of each instruction in the correct column. Look at the example.

Eg:- a. Use a good toothbrush.
b. Don't eat too much sugar.
c. Use a good herbal hair.
d. Don't use a rough comb.
e. Don't keep for long any bad teeth
f. Bresh and comb at least twice a day.
g. Use a tooth pick or brush to remove food particles.
h. Check for lice.
i. Keep your comb always clean.
j. Brush daily especially after meals and before you go to sleep.
k. Meet your dentist regularly.

| HEALTHY TEETH | HEALTHY HAIR |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(5 mts - 5 Marks)

4. Read the following text. Find out what the letters indicate and write the answers in the box against the letter .

A Volcano, as you know, is a mountain that erupts. But, only a few can say what actually happens. A Volcano may sleep for a long time,even for centuries with a faint cloud of smoke over the summit but underneath the rumbling and booming grow louder. Animals and birds flee sensing the oncoming disaster. A Column of black smoke and ashes. ground with a coat of rock. Then the mountain goes to sleep again.

Why do Volcanoes. Wake up? Deep down the earth, it is so hot that the rock becomes a molten mass full of gases. This mass is called 'Magma'. Cracks open in the rock above and the Magma pours through them to the surface forming the lava.




| | |
|---|---|
| K | |
| L | |
| M | |
| N | |
| O | |

(10 mts - 5 Marks)

5. You wish to apply for the post given below.Fill in the given application form by entering your curriculum vitae or CV.correctly.

EXECUTIVE **For office use only** TRAINEE

1. Name with initials :...............................
2. Permanent address :...............................
3. Date of birth :...............................
4. Age ...............................
5. Nationality :...............................
6. Sex :...............................
7. Civil status :...............................
8. School/Schools attended :...............................
9. Highest examination passed :...............................
10. Sports achievements :...............................
11. Name of non-related referees :...............................

NAME ADDRESS TELE NO

1. ...............................
2. ...............................

...................... ......................
Date Signature of applicant

You are expected to send your application under registered cover to:
The Personnel Manager,
J.B.N.Textiles Ltd,
Colombo - 6.

Now write the name and address in the correct place on this envelope.

6. Imagine you are a school prefect.Write 5 rules students **should not do** in school.
1. ...............................
2. ...............................
3. ...............................
4. ...............................
5. ...............................

7. Rewrite the following passage in the past tense.

The Merchant's son hears about the death of his father after about a month.He feels very sad and returns home immediately. But he is very angry when he sees the last will of his father. He doesn't speak a word. He leaves the house in anger and goes back to Greece.

(10 mts - 5 Marks)

8. Name the place where.
a. Aeroplanes are kept ...............
b. Water is stored ...............
c. Dead bodies are kept ...............
d. The dead are buried ...............
e. Leather is made ...............
f. Boxers meet their opponents ...............
h. Dogs are kept ...............
g. Birds are kept ...............
i. Historical relics are kept ...............
j. Soldiers are stationed ...............

Now Select the correct word for blanks above from the list given below.
Mortuary, kennel, museum, aviary, reservoir barracks, ring, cemetery, hanger, tannery

(5 mts - 5 Marks)

### Part - II Two hours

**Answer all the questions in the paper**

9. Read this article and select suitable paragraph "headlines" from the following list and write the numbers of the paragraph against the correct headlines.

(1) Arthritis is atype of rheumatism that affects the joines. The term is compounded from two worlds arthrom (Joint) and it is (inflammation).

(2) It is a serious affliction. It may not be the leading killer,but it is the leading crippler many thousend. of people are confined to bed during a year because of arthrities.

(3) Arthritis is not a new desease.Bones discovered in ancient Greek and roman tombs show arthritis in ancient Egyptian mummies archaeologists have found arthritis.

(4) Joints make it possible for bones to move. Man is a jointed created, because he had a bony skeletion. Joints are essential. If man had none, how would he get around? How could he do anything? Joints are self - llubricating.

(5) There are three main types of joints.They are immovable joints, slightly movable joints and freely movable joints. If a person exercises regularly, much arthritis is prevented. Regular exercise throughout life helps keep the joints lubricated. Joints are subject to various injuries. Sprains are the most common.

Headlines

| | |
|---|---|
| The importance of joints. | |
| The cause of arthritis. | |
| Is arthrtitis dangerous? | |
| Types of joints. | |
| Joints need to be lubricated. | |
| what is arthritis? | |
| It is an old disease. | |

(10 mts - 5 Marks)

10. Given below are 9 sentences. Read carefully. Find out the correct sentences that should come under the following heading and write the sentence number.
(1) We pased Niyadella:
(2) At early dawn, before the sunrise, the birds fly across the lagoon.
(3) It is The last human settlement along the river's immediate catchment.
(4) The coastline was sixty dangerous Kilometres away.
(5) Numerous species of fish are present in the reservoirs, streams and the Mahaweli river.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
14
★
08
★
1979



இறப்பு
06
★
12
★
2007

## செல்வராஜா கஜேந்திரன்

திதி: 25.11.2008

ஆண்டொன்று போனாலும்
அன்பு முகம் மறக்கலாமோ
கஜேந்திரா உன் உள்ளம் தேனடா!
உன் நினைவே பால்கலந்த கடைட்டா
வாட்டுதே உன் நினைவு எம் வாழ்வின்
ஒளிவிளக்கு அணைந்ததால் ...

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்
மகள், மனைவி, அம்மா,
சகோதரர்கள்.

## தாய்மார், குழந்தைகளுக்கு மானிப்பாயில் 'கிளினிக்'

நவாலி,நவ.25

மானிப்பாய் பகுதியிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பரிசோதனை (கிளினிக்) ஒவ்வொரு மாதத்திலும் வரும் மூன்றாவது செவ்வாய்க்கிழமை மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இங்கு குழந்தைப் பிள்ளைகளுக்கான கிளினிக்குகள் மாதத்தின் மூன்றாவது புதன் கிழமைகளிலும் நடைபெறுவதற்கான ஒழுங்குகளும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(203-100)

## புதிய பொது முகாமையாளர்

யாழ்ப்பாணம், நவ.25

காரைநகர் பல நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளராக நீண்ட காலம் கடமையாற்றிய செ.கோடிலிங்கம் ஓய்வு பெற்றதை அடுத்து அவருக்கான சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் சங்க ஊழியர்களால் நடத்தப்பட்டது.

தற்போது காரை நகர் பல நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளராக எஸ்.பி. ஜஸ்ரின் நியமிக்கப்பட்டுள்ளார்.

(203-250)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தியன் சந்தி பிரதான வீதிக்கருகில், சுவாட்ஸ் லேனில் இலக்கம் (2) இரண்டு, நல்ல சூழலில் சகலவசதிகள்கொண்ட வீடு விற்பனைக்குண்டு அத்துடன் காஸ் சிலிண்டர், காஸ்குக்கர், மேசைகள், கட்டில் விற்பனைக்குண்டு. வந்து பார்வையிடலாம்
தொடர்பு: 021 222 6786, 0777 6179077

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25
*
06
*
1952



மறைவு
06
*
12
*
2007

## அமரர் கதிரவேலு சிவசுந்தரலிங்கம்

திதி: திரயோதசி (25.11.2008)

ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறுமோ எங்கள் உள்ளங்கள் ஐயா!
உங்கள் பேச்சையும், சிரிப்பையும், அரவணைப்பையும்
எப்பிறப்பில் நாங்கள் இனிக்காண்போம்.
எங்கள் எல்லோரையும் ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட அப்பாவுக்கு
கண்ணீரால் பூக்களைச் சமர்ப்பிக்கிறோம்.

த.முகவரி: கல்வளை வீதி,
சண்டிலிப்பாய்.
நி.முகவரி: அரியாலை,
யாழ்ப்பாணம். (86114)

உங்கள் துயரால் வாடும்:
மனைவி,
பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
01
★
12
★
1922



விண்ணில்
26
★
10
★
2008

## அமரர் தருமலிங்கம் சிதம்பரம்

மாதமொன்று உருண்டோடியதம்மா
நோயெனும் பெயரில் காலன் கவர்ந்தானோ
அருமைப் பப்பாவிடம் சென்றீரோ
அருமை அண்ணனிடம் சென்றீரோ
மெழுகாயெல்லோ உருகிப்போனீரம்மா
ஆலமரமாய் இருக்கும் அம்மாவே
ஆறுதல் கூறும் அம்மாவே
ஆறுதல் கூற ஆருமின்றி ஆர்ப்பரிக்கவிட்டு
போனதேனோ? பூலோக வாழ்விது
காணுமென நினைத்தது ஏனோ?
வையகம் சுழலும் மட்டும் உன்நினைவிருக்கும்!

என்றும் உன் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.

(80118)

# எங்கள் நெஞ்சிலோர் ஆலயம்
# தந்தையே மந்திரம், தாயே கோயில்



அமரர் சின்னத்தம்பி
அமிர்தலிங்கம்
[மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடி] [திருநெல்வேலி தெற்கு]



திருமதி அமிர்தலிங்கம்
நாகரெத்தினம்
[உரும்பிராய் தெற்கு]



திருமதி சிவகுருநாதன்
தவமலர்
[திருநெல்வேலி தெற்கு - ஓவசியர்]

| | | | |
|---|---|---|---|
| உதயம் | 12.11.1897 | 21.04.1902 | 08.01.1930 |
| அஸ்தமனம் | 25.01.1968 | 31.01.1974 | 12.12.1947 |

செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனி சாம்பிணங்கள்
கத்தும் கணக்கென்ன காண் கயிலாயபுரி காளத்தியே
தொடரும் இரு வினை புண்ணிய பாவமுமே
தந்தை, தாய், சகோதரிக்கு எங்கள் பாச மலரஞ்சலிகள்

திருநெல்வேலி
தெற்கு. (79828)

திருமதி திருஞானம் பொன்மலர், செல்வி அமிர்தலிங்கம் பவளமலர், திரு.அமிர்தலிங்கம் சிவலிங்கநாதன்.

1ம் பக்கத் தொடர்ச்சி

# கொமர்ஷல் வங்கியே! உலகின் உ
# இணைக்கப்பட்டுள்ள முதல

நிதியியல் துறையில் நிதி உறுதிப்பாட்டை அளவிடும் காரணியான படி ஒன்று மூலதனத்தின் உறுதியான அடித்தளம், ஸ்திரத்தன்மை, மூலதன
வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான உலகின் தலைசிறந்த வங்கி தரப்படுத்தல

உலகின் நிதித்துறை சமூகம் உலகில் உயர் ஸ்தான வங்கி தரப்படுத்தல் பட்டியலை கூர்ந்து அவதானித்த வண்ணம் இருக்கின்றது. இத

இவ்வாறான தரப்படுத்தல் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்ததொரு உறுதிப்பாட்டினை மீள வலியுறுத்தும் அதேசமயத்தில், இவ்விருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் இணைவதற்கான நேர்முகப்பரீட்சை

அச்சுவேலி, நவ.25

இலங்கையில் உள்ள 9 ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கும் அடுத்தவருடம் பயிற்சிக்கு - ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

சிங்களமொழிமூலம் பயிற்சி பெறுவதற்கு 3200 ஆசிரியர்களும், தமிழ்மொழிமூலம் பயிற்சி பெறுவதற்கு 4000 ஆசிரியர்களும் விண்ணப்பித்துள்ளனர்.

சிங்களமொழிமூலம்பயிற்சிக்குவிண்ணப்பித்தவர்களுக்கு மகரகம ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் நேர்முகப்பரீட்சை நடை பெற்று வருகின்றன.

தமிழ்மொழிமூலம் ஆசிரியபயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை, வவுனியா கல்வியியல் கல்லூரி, மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை, மகரகம ஆசிரிய கலாசாலை ஆகியவற்றில் டிசெம்பர் முதல் வாரத்தில் நடைபெறவுள் ளன.

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்கு மிகக் குறைவான எண்ணிக்கையானோரே விண்ணப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (203-11)

# வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள்......



இலங்கை வங்கி சுன்னாகம் மேற்றாக் கிளையின் தன்னியக்கப் பணப்பரிமாற்று இயந்திரச் சேவையின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் முன்னாள் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.எ.அருமைநாயகம் நாடாவெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும், வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். அருகில் கிளை முகாமையாளர் S.B.அரசகுமாரும் காணப்படுகிறார்.



அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஹற்றன் நஷனல் வங்கியின் உயரதிகாரிகளான பி.சிறிதரன் மற்றும் ஏ.வி.பீடில் ஆகியோர் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுடன் பயிர்ச்செய்கை நிலைவரம் தொடர்பாகக் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.



இலங்கை வங்கி காரைநகர் கிளையில் முகாமையாளராகக் கடமையாற்றி வடமாகாண அலுவலகத்துக்கு மாற்றலாகிச் செல்லும் அமு.பகீதரனுக்கு அண்மையில் சேவைநலன் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

நிகழ்வில் இலங்கை வங்கியின் வட வலய உதவிப்பொது முகாமையாளர் என். சிவரெட்ணம் உரையாற்றுகின்றார். காரைநகர் உதவி அரச அதிபர் எஸ்.ஜெயசீலன், விழா நாயகன் புதிய முகாமையாளர் இ.சிவகுமாரன் ஆகியோர் அருகில் அமர்ந்திருக்கின்றனர்.

## வாசகர் திருமுகம்

### வண்ணை நாவலடி வீதியில் மின்வெட்டு நேரத்தில் இளைஞர்களின் தொல்லை....

யாழ். வண்ணார்பண்ணை, வடமேற்கில் அமைந்துள்ள நாவலடி வீதி பேச்சியம்பாள் தேவஸ்தானப் பகுதி மற்றும் கேசாவில் பிள்ளையார் ஆலய முன்வீதிச் சந்தி ஆகியவற்றில் மாலை மின்சாரம் தடைப்படும் நேரங்களில் ஒன்று சேரும் இளைஞர்களின் அட்ட காசம் அளவையும் மிஞ்சி வருவதாக அவ் வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதிகளை ஊடறுத்து உந்துருளிகள், துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தி அவற்றில் இருந்தவாறே சம்பாசனைகள் செய்வதும்-

வீதியை மூடி மூன்று நான்கு பேர்கள் மெதுவாகச் சென்று வயோதிபர் மற்றும் இளம் பெண்கள் விலத்திச் செல்வதைத் தடுப்பதும் -

தேவஸ்தானங்களில் வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளைகளில் கூடிநின்று பலத்த சத்தத்துடன் கேளிக்கைகளில் ஈடுபடுவது போன்ற இன்னோரன்ன அடாவடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் சகிக்க முடியாமல் இருக்கிறது.

தட்டிக் கேட்பவர்களுடன் வாய்த்தர்க்கம் முற்றி அடிபிடி நிலைமைகளும் உருவாகி விடுகின்றது. நிலைமை தற்சமயம் அளவை மீறிவிட்டதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

'தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால்' என்ற நிலைமை உருவாகி இளைஞர்களின் அடாவடிகளே தலை தூக்கி உள்ளது. இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தலை யிட்டு அப்பகுதியில் சீரழிந்துவரும் கலாசாரப்பிறழ்வுகளை நிறுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

வண்ணார்பண்ணை. - பொதுமகன்.

### நுளம்புகள் பெருகி நோய்கள் பரவும் அபாயம்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பகுதிக்கு உட்பட்ட பூநாரி மரத்தடி லேன் - சொர்ண வடலிக்கு இடையில் அமைந்துள்ள மழைநீர் மற்றும் அசுத்த நீர் போகும் வடிகால் மதகுப் பகுதி ஒரே குப்பை கூழங்கள், அடர்ந்த செடிகள் நிறைந்து நீர் போகாது துர்நாற்றம் வீசுகிறது. இதனால் நுளம்புகள் பெருகி நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நல்லூர்ப் பிரதேச சுகாதாரப் பிரிவின் கீழ் குப்பை கூழங்கள் வடிகால் துப்பரவு செய்யும் நகர் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் முன்னர் இப்பகுதியைச் சுத்தம் செய்தார்கள்.

ஆனால் தற்போது பல வருடங்களாக இவ்வடிகால் அமைப்புப் பகுதிக்கு வருவதில்லை. இதனால் வீதியோரங்கள், வடிகால் வாய்க்கால்களில் ஒரே குப்பை கூழங்கள் நிறைந்து காணப்பட்டு துர்நாற்றம் வீசுகிறது. இவ் வடிகால் வாய்க்கால்களின் ஊடாக நந்தாவில் பகுதியிலிருந்து வரும் மழைநீர் இம்மதகு வாய்க்காலூடாகத் தான் கல்லுண்டாய் காக்கை தீவுக் கடலை நோக்கி செல்லும். அதனால் சீர்கேட்டை இப்பகுதி மக்கள் பலமுறை உரிய அதிகாரிகளிடம் சொல்லியும் சீர்செய்யவில்லை. ஏன் இந்த அசமந்தப் போக்கு? இவ் வடிகால் போகும் மதகுக்கு அருகாமையில் முன் பகுதியில் மட்டும் நீர் வழிந்து செல்வதற்கு அணைகட்டியுள்ளார்கள். இன்னும் ஒரு கிலோ மீற்றர் வரை தூரம் கற்களால் அணை கட்டி முடிக்கவில்லை. ஆகவே இத் துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து பொதுமக்கள், குழந்தை களைக் காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நல்லூர். - பாதிக்கப்பட்ட மக்கள்.

இது ஒரு விளம்பரம்

உச்ச ஸ்தான 1000 வங்கிகளுக்குள்
லாவது இலங்கையின் வங்கி

, மூலதன நிறைவு போன்ற காரணங்களினால், உலக வங்கித்துறையில் முன்னிலையில் உள்ள 1000 தலைசிறந்த வங்கிகளுக்குள் கொமர்ஷல்
ப்படுத்தலுக்குள் சேர்ந்து கொண்ட முதலாவது இலங்கையின் வங்கியே கொமர்ஷல் வங்கி.

ற்றது. இத்தரப்படுத்தலை தேர்ந்தெடுத்து தொகுத்து வெளியிடுவது ஐக்கிய இராச்சியத்தின் முதற்தர நிதியியல் சஞ்சிகையான "த பாங்கர்".

இவ்விருது எமது ஊழியர்களுக்கு பெருமையையும், உயர்ந்த தர வங்கியியல் தரத்தை பேணுவதற்கும் உந்துசக்தியையும் வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

(6) Once they get in to the water they would have the fun till almost night.
(7) The track had become a sort of uneven stream - bed - eroded by many monsoons.
(8) There are many places in the sanctuary where the scenic beauty is beyond compare.
(9) Then we crossed the first of many streams.

A Journey Down the Kumbukkan oya.

(20 mts - 5 Marks)

11. Read the following passage and the statements given below. Complete the statements by underlining the correct answer.

The influenza virus has been leading the scientists a merry chase for decades now. A microscopic quick change artist, it comes in several different types, all of them subject to sudden, unpredictable alteations. So varied are the guises of theeflu virus that last year's flu vaccine is sometimes totally useless against this year's model of the germ.

Keeping up with the flu virus is the job of a network of influenza centres the W.H.O. has set up all over the world to act as listening posts.Whenever an eqidemic breaks out, the virus responsible for it is isolated at the nearest influenza centre and is closely exam ined. If none of the available vaccine offers protection against is world of the new virus goes out to all the other influenza centres and samples of it are made available to them. Tremendous efforts are made to produce a new vaccince before the virus has had a chance to spread too far.

The common cold is one virus disease that has so for stumped the vaccine markers. Colds are caused not by one virus or even one group of viruses, but by well over one hundred different ones.

One of the most recent vaccines to be developed is for German measles, also known as rubella. German measles is such a mild disease that there seemed little reason to have a vaccine for it unit 1941, when a starting discovery was made.

(1) The W.H.O has so far failed to find a vaccine for
  (a) influenza.
  (b) the common cold.
  (c) German measles.
(2) A vsccine for German measles was not developed until recently because
  (a) it was not considered dangerous.
  (b) it was not possible to produce one.
  (c) the W.H.O was not interested to find one.
(3) The word 'it' in think in paragraph two refers to
  (a) the new vaccine.
  (b) the new virus.
  (c) the influenza centre.
(4) It's not possible to have a permanent vaccine against influenza because
  (a) there is lack of co-ordination among the influenza centres.
  (b) the type of the flu virus changes yearly.
  (c) the spread of the virus is sudden.
(5) If the available vaccine against a virus is ineffective
  (a) the virus is allowed to spread .
  (b) it is controlled after the spreads
  (c) a new vaccine is produced to control it.

(20 mts - 5 Marks)

12. Complete this passage by filling blanks with the correct words from he list given below.

In (1) ....................... times, water rates (2) .................... charged by owners of (3) .............. and grain tax was (4) ................... by royal officials. Since (5).................... grain tax was the chief source of (6) ...................... large tanks and (7).......................... were constructed and maintained under (8) ................... supervision and the construction of irrigation works was considered one (9) ....................... the chief duties (10).............. king.

ancient, canals, collected, good, of, revenue, royal, tank, the, were.

(10 mts - 10 Marks)

13. Complete the following text filling the second half of word.

COMPUTERS

The computer is probably the most useful machine in the world today. It c................ do nearly every................ It can do all ki................ difficult mathe................ and solve many prob................ It is able to do a................ these things very qui................ and accurately.

Aonther wond................ thing about t................ computer is th.... .........it can reme ................ facts well and is able to pro................ these when requ................ In this way we can s................ that the computer h................ a perfect mem................ No human be ................ could ever have a memory li.................... that.Although a computer can do so ma.................... things. It cannot really think for its.................... it cannot work without instructions.

(10 mts - 10 Marks)

14. Choose the correct form of the verbs

THOMAS EDISON (1) (started / was staring)work on the railway when he was twelve, selling newspapers and snacks. There were long periods with nothing for him to do so he (2) (built / was building) himself a little lboratory in the luggage van where he could carry out experiments when he (3) (didn't sell / wasn't selling) things to passengers. Another way.that he (4) (occupied / was occupying) himself was by reading. He joined a library and (5) (read / was readig) every single book in it. One day when he (6) (waited / was waiting) at arstation he (7) (noticed / was noticing) a small boy who (8) (played / was playing) by the track, unaware that a train (9) (approached / was approaching) Edioson (10) (ran / was running) out and grabbed the child just in time.

(10 mts - 5 Marks)

15. Write a letter to your uncle who is in England asking him whether him whether he can send you some interesting novels.Include the following.
- inquire about his health
- tell him about your intention to improve your English knowledge.
- tell him about your need.
(Use about 15-100 words)

16. Write an article on one of of the following topics use about 250-300 words.
Topic 1 - Advantages and disadvantages of country life.
Topic 2 - The use and abuse of T.V
Topic 3 - My hobby.

Use the given guide lines.
Whent you start it?
What made you take to this hobby.
Its advantage.

(20 mts - 10 Marks)

# பூநகரி வெற்றி குறித்த பாடசாலைக் கொண்டாட்டம் இனரீதியான பேதங்களை மாணவர்களிடம் வளர்க்கும்

## சபையில் துரைரெத்தினசிங்கம் வலியுறுத்து

கொழும்பு, நவ:25

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து பூநகரி பிரதேசம் மீட்கப்பட்டமையை சிங்களப் பாடசாலைகளில் வெற்றி விழாவாகக் கொண்டாடுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இது மாணவர்கள் மத்தியில் இனரீதியிலான பேதங்களை வளர்க்க எடுக்கும் முயற்சியாகும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கல்வி உயர்கல்வி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அனைத்துலக ரீதியில் கல்வி, பொருளாதாரத்தில் தேசிய உணர்வுகளில் பின்தங்கிய ஒரு தோல்வி கண்ட நாடாக இலங்கை மாறியுள்ளது. ஒரு இனத்தின் கல்வி வசதி வாய்ப்புக்களை அழித்து விட்டால், காலகதியில் அந்த இனம் சீரழிந்து விடும். இதனைத்தான் மஹிந்த அரசு வடக்கு - கிழக்கில் செய்து கொண்டிருக்கின்றது.

விமானத் தாக்குதல்களில் சிக்குண்டு கொல்லப்பட்ட பொதுமக்கள் மற்றும் காயமடைந்தவர்களில் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களும், ஆசிரியர்களும் உள்ளடங்குவர். இந்நிலையிலேயே பூநகரி வெற்றி விழாவை பாடசாலைகளில் கொண்டாட மாணவர்களுக்கு ஊக்கம் கொடுக்கப்படுகின்றது. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பலவந்தப்படுத்தியும் இந்த வைபவம் நடந்தேறியிருக்கிறது. இது மாணவர்களை இன ரீதியாக மாசுபடுத்துகின்ற ஒரு செயலாகும்.

இராணுவ நடவடிக்கையினால், கிளிநொச்சி வலயத்தில் 26,168 மாணவர்களும், 754 ஆசிரியர்களும், 395 அலுவலகப் பணியாளர்களும் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் 12,500 மாணவர்கள் இதுவரை எந்தப் பாடசாலைகளிலும் இணையாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் துணுக்காய் கல்வி வலயத்தில் 2,500 மாணவர்களும், கிளிநொச்சி கல்வி வலயத்தில் 10,000 மாணவர்களும் உள்ளடங்குகின்றனர்.

மடு வலயத்தில் 36 பாடசாலைகளில் 33 பாடசாலைகள் முற்றாகப் பாதிப்பட்டுள்ளன. இங்கு கல்வி பயின்ற ஏறக்குறைய 8,000 மாணவர்களும், 175 ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டு கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் ஏறக்குறைய 1,500 மாணவர்களும் இதுவரை எந்தப் பாடசாலைகளிலும் இணையாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மடு வலயத்திலிருந்து கடந்த ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்குத் விண்ணப்பித்த மாணவர்களில் 40 சதவீத மாணவர்கள் இடப்பெயர்வுகளினால் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளனர். விமானத் தாக்குதல்கள், ஷெல் வீச்சுகளால் மாணவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பரீட்சை எழுதிக் கொண்டிருந்த வேளையில் கூட இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

யாழ்ப்பாண மாவட்டம் ஒரு காலத்தில் கல்வியில் வளர்ச்சி கண்ட மாவட்டமாக விளங்கியது. அப்போது அந்த வளங்களை தென்பகுதி மாணவர்களும் முழுமையாகப் பயன்படுத்தினர். நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த பல அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் அடங்குவர்.

யாழ். குடாநாட்டில் ஏறக்குறைய 120,000 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதேபோன்றுதான் மன்னார், வவுனியா மாவட்ட மாணவர்களும் உயிர் பாதுகாப்புக் கருதி படிப்பை இடைநிறுத்தி விட்டு புலம்பெயர்கின்றனர்.

கிழக்கிலும் இதுதான் நிலைமை. திருகோணமலை மாவட்டத்தில் வெருகல், ஈச்சிலம்பற்று பிரதேசங்களில் உள்ள 16 பாடசாலைகளும், மூதூர் கிழக்கில் உள்ள 17 பாடசாலைகளில் 7 பாடசாலைகளும், மூதூரில் இருல்குழி கஜமுகா வித்தியாலயமும் மீள தொடங்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையினால் சிதைவடைந்த கட்டடங்களிலும், மர நிழல்களிலும், தளபாட வசதிகளும் ஏனைய அடிப்படை வசதிகளின்றி ஆசிரியர் பற்றாக்குறைகளுடன் பெயரளவில் பாடசாலைகள் இயங்குகின்றன. இப்பாடசாலைகளிலிருந்த சகல உடைமைகளும் சிதைக்கப்பட்டும், களவாடப்பட்டும் உள்ளன. மூதூா கிழக்கில் சம்பூர் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாகப்பட்டுள்ளதால், அங்கு இயங்கி வந்த 7 பாடசாலைகளும் மீளத் திறக்கப்படாத காரணத்தினால், கல்வி பயின்ற 1,700 மாணவர்கள் பாதிப்புக்கப்பட்டுள்ளனர்.

(சி)

# பூநகரியுடான யாழ். - கொழும்பு வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, நவ. 25

பூநகரி ஊடாக யாழ்ப்பாணத்தையும் தென்னிலங்கையையும் இணைக்கும் வீதியைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

- இவ்வாறு நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் டி.பி.ஏக்க நாயக்க கூறியுள்ளார். என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கில் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டு வரும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இது பற்றிமேலும் கூறியவை வருமாறு:-

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்திப் பணிகளின் அடுத்த கட்டமாக சிலாபம்துறையிலிருந்து பூநகரி வரையான 41 கிலோ மீற்றர் நீளமான பாதை புனரமைக்கப்படவுள்ளது. மன்னார் முதல் பூநகரி வரை 2 ஒழுங்கைகளைக் கொண்ட நெடுஞ்சாலையொன்றும் நிர்மாணிக்கப்படும். இதேவேளை, மடு முதல் சிலாபத்துறை வரையான வீதியில் தற்போது புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீதிப் புனர்நிர்மாணப் பணிகளுக்கான கேள்விப் பத்திரங்களை ஒப்படைக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, சிலாபத்துறையில் நிர்மாணிக்கப்பட்ட 180 மீற்றர் நீளமான இரும்புப் பாதை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவ விடுதியில் வசதியீனம் கர்ப்பிணித் தாய்மார் அவதி

யாழ்ப்பாணம், நவ.25

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள மகப்பேற்று விடுதிகளில் போதிய வசதிகள் இல்லாமையால் அங்கு செல்லும் கர்ப்பிணிகள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகக் கூறப்படுகின்றது.

பிரசவத்திற்காகச் செல்லும் கர்ப்பிணிகளுக்கு உரியவகையில் கட்டில் வசதிகள் இல்லாததினால் அவர்கள் தரையில் இருப்பதாகவும் இரவுவேளைகளில் படிக்கட்டுக்களில் உறங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நுளம்புகளின் பெருக்கத்தினால் அவர்கள் இரவு, பகல் என்றில்லாமல் தொடர்ந்து நுளம்புக்கடிக்கு ஆளாகுவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை பிரசவ வேதனையில் செல்லும் தாய்மார்கள் அங்கு கடமை புரியும் ஊழியர்களால் உரிய முறையில் கவனிக்கப்படுவதில்லை என்றும் அநாகரிய சொற்களால் ஏசப்படுவதாகவும் குறை தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இவ்விடயத்தில் வைத்திய சாலை நிர்வாகம் உடனடிக் கவனம் எடுத்து இவற்றை சீர்செய்வதுடன் பிரசவ வேதனையுடன் வரும் கர்ப்பிணிகளை அன்புடனும் பண்புடனும் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்கப்படுகிறது. (203-288)

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு தீவக வலயத்தில் இடம்பெற்ற போட்டி முடிவு

நல்லூர், நவ.25

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு தீவக வலய மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வெளியாகியுள்ளது.

10-14 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் இடம்பெற்ற போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

த.கௌரிதரன்(யாழ்ரன் கல்லூரி), கு.திவ்யா(நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தி.), வி.சுகன்யா(கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம்)

15-19 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் விவரம்:-

ம.தவரஞ்சினி(நெடுந்தீவு ம.வி.), ஜெ.வெறோணிக்கா(புனித மரியாள் ம.வி.), கோ.மிரோஜா(கலாநிதி ஆ.தியாகராஜா ம.வி.).

இவர்களுக்கான இறுதிப் போட்டிகள் நடைபெறும் திகதி அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (203-111)

## அன்னா தொழிலக உரிமையாளருக்கு தொழில் முயற்சியாளர் விருது

யாழ்ப்பாணம், நவ.25

இணுவில் அண்ணா தொழிலக உரிமையாளர் எஸ்.பி.நடராசாவுக்கு தொழில் முயற்சியாளர் விருது கிடைத்துள்ளது.



சிறிய நடுத்தரக் கைத்தொழில்களில் உணவு மற்றும் பானங்கள் என்னும் துறையில் யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தை இவர் பெற்றுள்ளார்.

கிராமிய கைத்தொழில் மற்றும் ஊக்குவிப்பு அமைச்சின் அனுசரணையுடன் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தேசிய மட்டத்தில் இந்தப் போட்டியை நடத்தியிருந்தமை தெரிந்ததே. (அ-202)

# வைத்திய அதிகாரிகளைக் கண்டால் அசைகின்றன மின்விசிறிகள்

உடுப்பிட்டி, நவ.25

வைத்திய அதிகாரிகள் நோயாளர் விடுதிகளுக்குச் செல்லும்போது மட்டுமே அங்குள்ள காற்றாடிகள் அசைகின்றன, மின்குமிழ்கள் ஒளிர்கின்றன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சில நோயாளர் விடுதிகளில் இவ்வாறு நடைபெறுகின்றது.

நோயாளர் விடுதிகளில் தேவைபடும் வேளைகளில் மின்விசிறிகள் சுழலவிடப்பட வேண்டியமை அவசியம். அதுமட்டுமன்றி விடுதிகள் வெளிச்சமாகவும் காணப்பட வேண்டும்.

ஆனால், இந்த வைத்தியசாலையில் நோயாளருக்கு ஏற்றவாறு மின்விசிறிகள் அசையவிடப்படுவதில்லை என்றும் மின்குமிழ்கள் ஒளிரவிடப்படுவதில்லை என்றும் நோயாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதிகாரிகள் இந்த விடுதிகளுக்குச் செல்லும் வேளையில் மட்டுமே இவை ஒளிரவிடப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, இந்த விடயத்தில் உரியவர்கள் கவனம் எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (203-155)

## ஊர்காவற்றுறை பிரதான வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

ஊர்காவற்றுறை, நவ.25

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும் பொலிஸ் நிலையத்திற்கும் பின்புறமாக உள்ள ஊர்காவற்றுறை பிரதான வீதி மழைகாலங்களில் போக்குவரத்துச் செய்யமுடியாது சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்பட அனைவரும் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (203-325)

# யாழ்.ப.நோ.கூ.சங்க நடமாடும் சேவை இந்தவாரம் அரச, தனியார் நிறுவனங்களில்

யாழ்ப்பாணம், நவ.25

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு நடமாடும் விற்பனை நிலையம் இந்த வாரத்தில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தமது சேவையை மேற்கொள்ளும் என்று சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை பனை அபிவிருத்தி சபையிலும் மாலை யாழ்.நீதி மன்ற வளாகத்திலும் நாளை புதன்கிழமை காலை யாழ்.செயலகத்திலும் மாலை யாழ். பிரதேச செயலகத்திலும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை யாழ்.கல்வித் திணைக்களத்திலும் மாலை சுகாதாரத் திணைக்களத்திலும் சேவை இடம்பெறும்.

28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை யாழ்.மாநகர சபையிலும் மாலை யாழ். கூட்டுறவுச்சபை வளாகத்திலும் 29 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையிலும் இந்த நடமாடும் சேவை இடம்பெறும்.

இந்த நடமாடும் கூட்டுறவு சேவை நிலையம் ஊடாக அரச மற்றும் தனியார் ஊழியர்கள் நியாய விலையில் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கான சகல நடவடிக்கைகளையும் சங்கம் மேற்கொண்டுள்ளது. (203-224)

## குடாநாட்டில் ஒருவார காலத்தில் 144.9 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி

நல்லூர், நவ.25

குடாநாட்டில் கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நேற்று திங்கட்கிழமை காலை 8.30 மணி வரை 144.9 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை ஆய்வு மையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதத்திற்கான வருடாந்த மழைவீழ்ச்சி சராசரியாக 336.1 மில்லி மீற்றர் எனவும் இந்த மாதத்திற்கான மழைவீழ்ச்சி 179.8 மில்லி மீற்றர் எனவும் பதிவாகியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (203-111)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சீருடைப்படி அடுத்த வருடம் அதிகரிப்பு; மாகாண ஆளுநர் அனுமதி வழங்கினார்

யாழ்ப்பாணம், நவ.25

வடக்கு மாகாண திணைக்கள ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் சீருடைப்படியை அடுத்த வருடம் தொடக்கம் அதிகரிக்க மாகாண ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதுவரை சீருடைப் படியாக வழங்கப்பட்டு வந்த ஆயிரத்து 100 ரூபா அடுத்த வருடம் தொடக்கம் 2 ஆயிரத்து 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மாகாண பிரதிப் பிரதம செயலாளர் இ.இரவீந்திரன் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

சீருடைத் துணி பெறும் உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே இக் கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார். (203-207)

## இலவச வாழும் கலைப்பயிற்சி

யாழ்ப்பாணம், நவ.25

வாழும் கலைப் பயிற்சிகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை முழுநாளும் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை இந்த நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

குழந்தைகள், இளையோர், முதியோர் என மூன்று பிரிவுகளில் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன. (203)

## முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெறவில்லை

அச்சுவேலி, நவ.25

முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் III இல் இருப்பவர்களை முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் II இற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெறவில்லை.

முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் III இல் கடமைபுரிபவர்களை தரம் II இற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பரீட்சையை நடத்துவதற்கான வினாத்தாள்கள் மற்றும் ஆவணங்களை எடுத்துச் சென்ற பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளும் வாகனமும் வவுனியாவில் இருந்து செல்வதற்கு அனுமதிக்கப்படாமையால் உடும்புக்குளம் திரும்பிச் செல்லவேண்டி ஏற்பட்டது.

இதனால் பரீட்சைகள் இரண்டு மாவட்டங்களிலும் நடைபெறவில்லை. (203-11)

# 2009ஆம் ஆண்டுக்கான பொதுவிடுமுறைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டது

அச்சுவேலி, நவ.25

2009ஆம் ஆண்டுக்கான பொதுவிடுமுறை தினங்களை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையின்படி கல்வி அமைச்சு சகல பாடசாலைகளுக்கும் விடுமுறைகளை அறிவித்துள்ளது.

பொது விடுமுறைகளின் விவரம் வருமாறு:

2009 ஜனவரி 10 சனிக்கிழமை - துருத்து முழுநோன்மதி தினம், 2009 ஜனவரி 14 புதன்கிழமை - தமிழ் தைப்பொங்கல் தினம், 2009 பெப்ரவரி 04 புதன்கிழமை - தேசிய தினம், 2009 பெப்ரவரி 09 திங்கட்கிழமை - நவம் முழுநோன்மதி தினம், 2009 பெப்ரவரி 23 திங்கட்கிழமை - மகாசிவராத்திரி தினம், 2009 மார்ச் 10 செவ்வாய்க்கிழமை - மெதின் முழுநோன்மதி தினம், 2009 மார்ச் 10 செவ்வாய்க்கிழமை (மீலாதுன் நபி)நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த தினம், 2009 ஏப்ரல் 09 வியாழக்கிழமை - பக் முழுநோன்மதி தினம், 2009 ஏப்ரல் 10 வெள்ளிக்கிழமை - பெரிய வெள்ளி தினம், 2009 ஏப்ரல் 13 திங்கட்கிழமை - சிங்கள தமிழ் புத்தாண்டு தினத்திற்கு முந்திய தினம்.

2009 ஏப்ரல் 14 செவ்வாய்க்கிழமை - சிங்கள தமிழ் புத்தாண்டு தினம், 2009 மே 01 வெள்ளிக்கிழமை - மே தினம், 2009 மே 08 வெள்ளிக்கிழமை - வெசாக் முழு நோன்மதி தினம், 2009 மே 09 சனிக்கிழமை - வெசாக் முழு நோன்மதி தினத்துக்கு அடுத்த தினம், 2009 ஜூன் 07 ஞாயிற்றுக்கிழமை - பொசன் முழுநோன்மதி தினம், 2009 ஜூலை 06 திங்கட்கிழமை - எசல முழுநோன்மதி தினம், 2009 ஆகஸ்ட் 05 புதன்கிழமை - நிக்கினி முழு நோன்மதி தினம், 2009 செப்ரெம்பர் 04 வெள்ளிக்கிழமை - பினர முழு நோன்மதி தினம், 2009 செப்ரெம்பர் 21 திங் கட்கிழமை - ஈதுல் பித்ர் (றம்ழான்) பெரு நாள் தினம் 2009 ஒக்ரோபர் 03 சனிக்கிழமை - வப் முழுநோன்மதி தினம்.

2009 ஒக்ரோபர் 17 சனிக்கிழமை தீபாவளி பெருநாள் தினம், 2009 நவம்பர் 02 திங்கட்கிழமை இல் முழுநோன்மதி தினம், 2009 நவம்பர் 28 சனிக்கிழமை - ஈதுல் அல்ஹா (ஹஜ்) பெருநாள் தினம், 2009 டிசம்பர் 01 செவ்வாய்க்கிழமை - உந்துவப் முழுநோன்மதி தினம், 2009 டிசம்பர் 25 வெள்ளிக்கிழமை- நத்தார் தினம், 2009 டிசம்பர் 31 வியாழக்கிழமை - துருத்து முழு நோன்மதி தினம். (203)




வடமராட்சி வலய ஆங்கில கணித, விஞ்ஞானப் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் வடமராட்சி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி, பிரதம விருந்தினரான இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம், சிறப்பு விருந்தினரான பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் ... நிற்பதையும், பிரதம விருந்தினர் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (218)

## வலி.தென் மேற்கில் 17 முதியோர் சங்கங்கள்

நவாலி, நவ.25

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தற்போது 17 முதியோர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 5 சங்கங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஏனைய சங்கங்கள் மாதாந்தம் கூட்டங்களை நடத்தி அதன் அறிக்கைகளையும், யாப்பு விதிகள், கணக்கு அறிக்கைகள் என்பன வற்றையும் ஒழுங்காக சமர்ப்பித்தால் விரைவில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

சண்டிலிப்பாய் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் அருந்தவராசா முதியோர் சங்கங்களுடன் நடத்திய கலந்துரையாடலில் இதனைத் தெரிவித்தார். (203-100)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், நவ.25

வலி.கிழக்குப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மறுசீரமைப்புப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பட்டறை இன்று நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டு பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(202)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் 24.11.2008 திங்கட்கிழமை உயர் தொழில்நுட்ப நிறுவனப் பட்டமளிப்பு விழாவில் HNDA பட்டம்பெற்ற

**செல்வி வாசுகி நாகமுத்து**

அவர்களைப் பட்டங்களுடன் பதவிகளும் மேலும் பெற்றிட பாராளும் பேறுடை நங்கையாய், வானகமும், மண்ணகமும் வாழ்த்திட இறையாசியும் பரிவுடன் மேன்மேலும் கிடைத்திட உளங்கனிந்த பல்கோடி வாழ்த்துக்கள்

இதயம் கனிந்து வாழ்த்துவோர்:
க.நித்தியானந்தன் குடும்பத்தினர்
நண்பி - தனுஷா

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (80127)


## பருத்தித்துறை முத்தமிழ் விழாவில் 8 பேர் விருது வழங்கிக் கௌரவிப்பு

மந்திகை, நவ.25

பருத்தித்துறைப் பிரதேச கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழாவில் எட்டுக் கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரச அதிபர் கே.கணேஸ் விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

விருதுகள் பெற்றோர் விவரம் வருமாறு:

வி.சுந்தரேசன் (இலக்கியம்),ஆர். சடாட்சரதேவி (இலக்கியம்), கே.தேவராஜா (நாடகம்), எஸ்.உருத்திரேஸ்வரன் (நாடகம்), வி.இரத்தினராஜா (நாடகம்), வி.கார்த்திகேசு (மரச்சிற்பம்), எஸ்.கணேசமூர்த்தி (பாரம்பரிய விளையாட்டுக்கள்), எஸ்.திருச்செல்வம் (சமய, கலை, கலாசார சமூக சேவைகள் - இலங்கை நல்லுறவு ஒன்றியம்). (203-218)

## இடம்பெயர்ந்து கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளம்

யாழ்ப்பாணம், நவ.25

இடம்பெயர்ந்து யாழ்.கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமை யாற்றும் ஆசிரியர்களுக்கான ஒக்ரோபர் மாதத்துக்குரிய சம்பளம் வழங்கப்படவுள்ளது. குறிப்பிட்ட ஆசிரியர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் வேதனப் பட்டியலில் கையொப்பமிட்டு வங்கியூடாகப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(202)


## வலி.கிழக்கு பிரதேச சபை - பாதீடு 2009

பிரதேச சபை கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக 2009ஆம் ஆண்டுக்கான எமது சபையின் பாதீடு பொது மக்கள் பார்வைக்காக எமது தலைமை அலுவலகத்தில் 25.11.2008 இல் இருந்து 02.12.2008 வரை வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.

வலி.கிழக்குப் பிரதேச சபை,
புத்தூர்.
24.11.2008
(C/555746)
த.நடராசா
செயலாளர்

## 31ஆம் நாள் இதய அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திரு.சி.உமாச்சந்திரன் அவர்களின்
அன்பு மாமியார்
திருமதி சிவபாக்கியம் அன்னலிங்கம்
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு, அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- பாடசாலைச் சமூகம்,
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்
வண்ணார்பண்ணை (80131)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க காரியாலய உதவியாளரான
அமரர்
வேலாயுதபிள்ளை உதயசூரியன்
அவர்களின் பிரிவால் துயருற்றுள்ள அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
330, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
அங்கத்தவர்கள்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
(80130)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 . 06 . 1978



மறைவு
25 . 11 . 2003

### அமரர் இரத்தினேஸ்வரன் சுகுமார்
[நிரஞ்சன்]

எம் குடும்பத்தின் குல விளக்கே நிரஞ்சா
எம் இதயமதில் விடிவு தந்த விடிவெள்ளியே!
உன்னை ஈன்றவள் அந்தோ பரிதவித்தாள்
உடன் பிறந்தோர் சிறகிழந்த அன்றிலானோம்
ஏனிந்த வேதனை! யார்செய்த சோதனை!
ஏதும் அறியோம்! இன்று உன்னைத் தேடுகின்றோம்!
இன்னும் உன் வரவுக்காய் கண்ணகளில் கண்ணீருடன்
காத்திருக்கின்றோம்.

8 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பால்ராஜா

வேலணை மேற்கு, முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது பிரான்சில் வசித்து வந்தவருமாகிய கணபதிப்பிள்ளை பால்ராஜா அவர்கள் 21.11.2008 வெள்ளிக்கிழமை பிரான்சில் காலமானார்.



அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம்-ராஜலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - கனகம்மா, கந்தையா-காமாட்சியம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், சற்குணராணி (ராணி)யின் ஆருயிர்க் கணவரும், பிரசாந்தன், துசாந்தினி, துவாரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நற்குணசீலன் (கனடா), கேதீஸ்வரராஜா (ஈசு- பிரான்ஸ்), வரதராஜா (குகன்- பிரான்ஸ்), சசிரேகா (கனடா), வசந்தராஜா (கனடா), வில்வராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேசவதி, சியாமளா, தெய்வராணி (ஞானி), திருமொழி, யாழினி, உதயமாலா, காலஞ்சென்ற சற்குணம் சதானந்தன், செல்வராணி, மகேந்திரன், தனலட்சுமி, ராஜலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ராஜேந்திரன், ரங்கராஜன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.11.2008 புதன்கிழமை பிரான்சில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
மனைவி-011 33160077958
மக்கள்-0[illegible]
தாய்,சகோதர[illegible] 5925

பிரான்ஸ்.

## UNIVERSITY OF JAFFNA SRILANKA
## MEDIA RESOURCE AND TRAINING CENTRE
## Vacancies

The media Resource and Training Centre is a joint venture of the University of Jaffna and the Institute of further Education (FOJO) Sweden.

Applications are invitited from suitable candidates for the following posts in the media Resource and Training centre (MRTC), University of Jaffna upto 8th December 2008.

I. Technical officer (on Contract)
II. Office Assistant (on contract)

Qualifications for Technical Officer (On contract)

a. Three (03) G.G.E (Advance Level) passses in one sitting
b. At least two years experience in Printing Electronic Media related to Audio, Video recording and editing

The age limit is 18 - 35 years
Salary : Rs.13,500/- fixed per month
Selection by practical test and interview

Qualifications and job description for Office Assistant (on contract)

I. Must have passed G.C.E (O/L)
II. The age limit is 18 - 35 years
III. Have to assist the Secretary in all office duties
IV. Have to maintain the Office, Classrooms and other compartments
V. Have to carry Official letters and other documents to and from the Main Campus of the University

Salary: Rs.9000/- fixed per month
Selection by Interview

**General Conditions:-**

This is a full - time assignment and intially it is for a period of one year from the date of commencement of the assignment. However, the assignment is renewable if the services rendered and work performance during the tenure of assignment is satisfactory.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF) Media Resources and Training Centre will contribute the EPF and the Employees Trust Fund.

Applications for the posts shall be sent to the Senior Assistant Registrar/ Establishments. Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments. University of Jaffna, Sri Lanka either in person or by post, on a payment of Rs.100/ per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope 23 x 10 c.m. in size.

Applications recived after the closing date will be rejected without intimation.

**Acting Registrar**
20.11.2008


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழினத்தைக் காக்க உலகத்தமிழர் அனைவரும் ஒன்றாகக் குரல் கொடுக்குக!

## முதல்வர் கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, நவ.25

ஈழத் தமிழர்கள் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி - அவர்களைக் காப்பாற்ற உலகிலுள்ள அனைத்துத் தமிழர்களும் ஒற்றுமையாக - ஓரணியில் நின்று குரல் கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் நம் தமிழ்ச் சகோதரர்கள் தினம் தினம் கொல்லப்படுவது தொடர்கிறது. அந்தப் படுகொலையைத் தடுத்து நிறுத்த இயலாத பரிதாப நிலையில் உள்ளோம்.

எனது எல்லா சாதனைகளையும் விட, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையே பெரும் சாதனையாகக் கருதுகிறேன் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



வாழ்நாள் சாதனையாளர் விருது கருணாநிதிக்கு வழங்கப்படும்போது..........

சென்னை சாந்தோம் கலைத் தொடர்பு நிலையம் சார்பில் முதல்வர் கருணாநிதிக்கு ''வாழ்நாள் சாதனையாளர்'' விருது வழங்கும் விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கலை, இலக்கியம், சினிமா, பத்திரிகை ஆகிய ஊடகங்களின் வழியாக அவர் ஆற்றி வரும் பணியைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.

விருதைப் பெற்றுக்கொண்டு ஆற்றிய ஏற்புரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியவை வருமாறு -

இன்றைய நாள் ''வாழ்நாள் சாதனையாளர்'' விருது எனக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சாந்தோம் கலை விழா மன்றம் என்னைப் பெருமைப்படுத்தி, ஊக்கத்தை, உற்சாகத்தை வழங்கியிருக்கின்றது. அதற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னை சாதனையாளன் என்று குறிப்பிடுவதை விட, நான் பல சோதனைகளைக் கண்டவன் என்ற முறையில் சோதனையாளன் என்றே குறிப்பிடலாம். எனவே, சாதனையாளர் விருது இப்போது எனக்கு வேண்டாம், விழாவை ஒத்திவையுங்கள் என்று நான் கேட்டுக்கொண்டேன்.

அது மாத்திரமல்ல, இப்படிப்பட்ட ஒரு சிறப்பான விழா, தமிழகத் தலைநகரத்தில் நடைபெறும்போது, அதிலே கலந்துகொள்ள எனது மனம் ஒப்பவில்லை, அதற்குக் காரணம் விழா நடக்கின்ற இந்த நேரம், நமது தமிழன் வெட்டப்பட்டு, குத்தப்பட்டு, சுடப்பட்டு இலங்கைத் தீவில் பிணமாகச் சாய்ந்து கொண்டிருக்கிறான், இந்த நேரத்தில் விழாவில் கலந்து கொண்டு விருது பெறுவதை நான் சிறப்பாகக் கருதவில்லை.

ஆகவே, வேறொரு நாளில் வைத்துக் கொள்ளலாம் என்று எவ்வளவோ வேண்டிக் கேட்டுக் கொண்டேன்.

சாதனையாளன் என்பதை நீங்கள் விரும்புகின்றவாறு நான் ஏற்றுக்கொண்டாலுங் கூட, எனது சாதனைகளை வரிசைப்படுத்தித் தொடர்ந்தாலும் கூட, எனது சாதனை, எனது உணர்விற்கேற்ப, தமிழர்கள் உண்மையிலேயே வாழ்த்துவதற்கேற்ப அமைந்தது அந்தச் சாதனை என்று சொன்னால், அது இலங்கைத் தீவில் தமிழன் அமைதியாக வாழ ஒரு வழி கண்டாகிவிட்டது என்ற அந்தச் செய்திதான் நான் முதன்மையானதாகவும், கடைசியாகவும் செய்கின்ற சாதனை என்பதை உங்களுக்கு நான் இந்த நேரத்தில் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு இனமே, பக்கத்தில் இலங்கைத் தீவில் அழிக்கப்படுகிறது. எந்த இனம்? அங்கே ஆண்ட இனம். எந்த இனம்? இராஜ இராஜ சோழனால் படையெடுக்கப்பட்டு, வெற்றிக்கொடி பறக்க பரிபாலனம் செய்யப்பட்ட அந்த நாட்டில், இன்று அவனது இனம் அழிந்து கொண்டிருக்கின்ற அந்தக் காட்சியை காண்கின்றோம், செய்திகளைக் கேள்விப்படுகின்றோம்.

### பரிதாபத்துக்கு உரிய நிலையில்

அவர்களைக் காப்பாற்ற முடியாமல், காப்பாற்ற நமது கரத்தை நீட்ட முடியாமல், நமது நிலை, பரிதாபத்திற்குரியதாக ஆகியிருக்கிறது.

இந்த நிலை மாறித் தீரவேண்டும், மாற்றப்பட வேண்டும், மாற்றுவதற்கு எல்லா தமிழர்களும், தமிழகத்தில் உள்ள மக்களும் உலகத்தில் வாழ்கின்ற தமிழர்களும் ஒற்றுமையாகக் குரல் கொடுக்க வேண்டும், அணிவகுக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் இங்கே வழங்குகின்ற வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு பெருமை, சிறப்பு, பொருத்தம் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். - என்றார்.

விழாவுக்கு அகில இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர் ஸ்ரனிஸ்லாஸ் பெர்னாண்டோ தலைமை வகித்து, விருதை வழங்கினார். பத்திரிகை சேவையைப் பாராட்டி 'இந்து' நாளிதழ் ஆசிரியர் என். ராமுக்கு விருது வழங்கப்பட்டது. தமிழக சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சி ''கொறடா'' பீட்டர் அல்போன்ஸ் வாழ்த்திப் பேசினார்.

நிகழ்ச்சியில் இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்காக ரூ.10 லட்சம் முதல்வரிடம் வழங்கப்பட்டது.

# இன்றைய மறியலுக்கு புதிய தமிழகம் அழைப்பு

ஈழத் தமிழருக்கு ஆதரவாக கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய சர்வ கட்சிக் கூட்ட முடிவின் படி இன்று நடக்கும் மறியல் போரில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும், இலங்கைத் தமிழர்கள் மீதான சிங்கள பேரினவாத அரசின் போர் நடவடிக்கைகளை இந்திய அரசு உடனடி யாக தடுத்து நிறுத்திட வலி யுறுத்தி கம்யூனிட் நடத்திய அனைத்துக் கட்சி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 25ஆம் திகதி (இன்று) தமிழகத்தில் உள்ள அனைத்து மத்திய அரசு அலுவலகம் முன்பு மறியல் போராட்டம் நடத்தப்படுகிறது.

இதில் புதிய தமிழகம் கட்சியின் தொண்டர்கள் அந்தந்த மாவட்ட செயலாளர் கள் தலைமையில், கலந்து கொள்வார்கள். சென்னையில் நானும் மறியல் போராட்டத்தில் பங்கேற்பேன் - என்று தெரிவித்துள்ளார்.

# ஈழத் தமிழர் நிவாரண நிதிக்காக கல்வித்துறை ரூபா 12 கோடி நிதி

சென்னை, நவ. 25

ஈழத் தமிழர் நிவாரண நிதிக்கு தமிழக அரசின் பாடசாலைக் கல்வித்துறை சார்பாக 12.61 கோடி ரூபாவை முதலமைச்சர் கருணாநிதியிடம் அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று வழங்கினார்.

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதற்காக முதலமைச்சர் விடுத்த வேண்டுகோளை ஏற்று பாடசாலைக் கல்வித்துறையில் பணியாற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவரும் சேர்ந்து நிதி வழங்கியுள்ளனர்.

அதன்படி, பாடசாலைக் கல்வித் துறையின் கீழ் செயற்படும், பாடசாலைக் கல்வி இயக்கம் சார்பாக 5 கோடியே 98 லட்சத்து 87 ஆயிரத்து 410 ரூபா, தொடக்கக் கல்வி இயக்கம் சார்பாக 6 கோடியே 14 லட்சத்து 29 ஆயிரத்து 746 ரூபா, அனைவருக்கும் கல்வித் திட்ட இயக்கம் சார்பாக 25 லட்சத்து 96 ஆயிரத்து 432 ரூபா, ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கம் சார்பாக 20 லட்சத்து 93 ஆயிரத்து 623 ரூபாய், மெட்ரிகுலேஷன் பாடசாலை இயக்கம் சார்பாக ஆயிரத்து 628 ரூபா, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் சார்பாக 68 லட்சத்து 998 ரூபா, பாடசாலை சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கம் சார்பாக 12 ஆயிரம் ரூபா, அரசுத் தேர்வுகள் இயக்கம் சார்பாக 64 ஆயிரம் ரூபா என மொத்தம் 12 கோடியே 61 லட்சத்து 88 ஆயிரத்து 837 ரூபா வழங்கியுள்ளனர்.

இத்தொகைக்குரிய காசோலைகளை முதலமைச்சரிடம் பாடசாலைக் கல்வித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று வழங்கினார்.

# இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தி கடந்த ஞாயிறன்று பெங்களூரில் மாநாடு




இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிரான போரை தடுத்து நிறுத்தி - யுத்த நிறுத்தத்தை அறிவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுமுன்தினம் பெங்களூரில் மாநாடு நடத்தப்பட்டது.

கர்நாடக மாநில பெரியார் திராவிடர் கழகத்தினால் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை இம்மாநாடு பெங்களூரில் நடத்தப்பட்டது.

இதில், சோமசாச வேதிகே என்ற அமைப்பின் சார்பில் அசோக், கருநாடக தமிழ் மக்கள் இயக்கத்தின் சார்பில் ஐ. இராசன், தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர். மீனாட்சி சுந்தரம் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த தமிழ் உணர்வாளர்கள் கலந்துக்கொண்டு, சிங்கள அரசின் காட்டுமிராண்டித்தனத்தையும், இந்த இனப்படுகொலைக்குத் துணைபோகும் இந்திய அரசின் துரோகத்தையும் கண்டித்து கண்டன உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து, பேராசிரியர் சரசுவதி சிறப்புரையாற்ற, பெரியார் திராவிடர் கழகத் தலைவர்.கொளத்தூர்.மணி மாநாட்டு நிறைவுரையாற்றினார்.

பேராசிரியர் சரசுவதி தனது உரையில்,

இலங்கையின் பூர்வீக குடிகள் தமிழர்களே, இலங்கை என்ற பெயரிட்டதே தமிழன் தான், இலங்கைத் தீவுக்கு தாமிரபரணி என்ற பெயரும் உண்டு என்ற செய்திகளை சரித்திரச் சான்றுகளோடு விளக்கிப் பேசினார்.

கொளத்தூர் மணி தனது நிறைவுரையில்,

தமிழக மக்களின் ஈழ ஆதரவு கட்டுடைத்து வெளிப்படும் நேரத்தில், சகோதர யுத்தம் என்ற பெயரிட்டு, தமிழகத்தின் அரசியல் தலைவர்களின் திரிபுவாதத்திற்கு பதிலளிக்கும் வகையில் 2005இல் நடைபெற்ற தேர்தலில் புலிகளின் ஆதரவு பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதையும், இந்த அமைப்பில் மாற்று இயக்கத்தவர்கள் கூட, கடந்த கால தவறுகளை உணர்ந்து புலிகளின் தலைமையை ஏற்றுக் கொண்டதையம் சுட்டிக்காட்டினார்.

ஈழத்தமிழர் படுகொலைக்கு சிங்களவனுக்கு ஆயுதம் கொடுத்து, இலங்கையின் இறையாண்மையைக் காக்கும் இந்தியாவின் இறையாண்மையை கேள்விக்குள்ளாக்கும் சிங்கள குள்ள நரித்தனம் குறித்தும் -

''ஆபரேஷன் முத்துமாலை'' என்ற பெயரில், இந்திய துணைக்கண்டத்தை சுற்றிலும் தளங்களை அமைத்து வரும் சீனாவிற்கு இலங்கை அரசு 1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை மீறி இடமளித்திருப்பது - இந்தியாவின் பாதுகாப்பை காவு கேட்கும் நடவடிக்கை. இதுபற்றிக் கவலைப்படாத அரசு மற்றும் உளவு நிறுவன அக்கறையின்மை குறித்தும் விரிவாகக் கூறினார்.

பெரியார் திராவிடர் கழகத்தினர் நடத்திய இம்மாநாட்டில் கர்நாடகத்திலுள்ள தமிழ் அமைப்புகளும், அரசியல் கட்சியினரும், மாணவர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கைப் பிரச்சினையைக் கையிலெடுத்து விலைவாசி உயர்வை மறைக்கிறது தி.மு.க.

## விஜயகாந்த் குற்றஞ்சாட்டு



தேனி, நவ. 25

இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையில் எடுத்துக் கொண்டு விலைவாசி உயர்வை திமுக மறைக்கப் பார்க்கிறது - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேனி மாவட்டம், கம்பத்தில் 54 ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணத்தை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தி வைத்து பேசுகையிலேயே அவர் அதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு பேசியவை வருமாறு-

தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய கட்சிகள் மாறி, மாறி ஆட்சி செய்து நாட்டுக்கு வறுமையை மட்டுமே கொடுத்துள்ளன.

இரு கட்சியினரும் ஊழல் செய்து கோடி, கோடியாகச் சம்பாதித்துள்ளனர். கூட்டுச் சேர்ந்து மணல் கடத்துகின்றனர். தி.மு.க. அமைச்சர்கள் கல்லூரிகளை நடத்துகின்றனர்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின் தட்டுப்பாட்டுக்கு இவ்விரு கட்சிகளுமே காரணமாகும். அ.தி.மு.க. ஆட்சியில் மின் உற்பத்தியைப் பெருக்கவில்லை. ஐந்தாண்டுத் திட்டங்களில் மின் உற்பத்திக்கான திட்டங்கள் ஏதும் இல்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை கையில் எடுத்துக்கொண்டு தி.மு.க.வினர் விலைவாசி உயர்வை மறைக்கப் பார்க்கின்றனர்.

அமைச்சர் மு.க.ஸ்டாலின், 'ஒரு சில அரசியல் கட்சித் தலைவர்கள் முதல்வர்களாக ஆசைப்படுகின்றனர்' என்று என் பெயரைச் சொல்லாமல் குறிப்பிட்டுள்ளார். ஸ்டாலின் முதல்வர் ஆவதை நான் தடுக்கவில்லை. தே.மு.தி.க. ஆரம்பித்து 4 ஆண்டுகளில் கட்சி வளர்ச்சியைப் பார்த்து என்ன பயம்.

தே.மு.தி.க.வில் இளைஞர்கள் சேருகின்றனர் என்பதை அறிந்து அ.தி.மு.க. இளைஞர் மற்றும் மகளிர் பாசறையைத் தொடங்கியுள்ளனர். இலவச கணினிப் பயிற்சியை ஆரம்பித்தேன். அதைப் பார்த்து அவர்களும் கணினி பயிற்சியைத் துவக்குகின்றனர்.

நாட்டில் மாற்றம் ஏற்பட வேண்டும். உணவு, உடைகளை தரம் பார்த்து வாங்கும் மக்கள் அரசியல் கட்சிகளை ஏன் தரம் பார்ப்பதில்லை?.

தேர்தலில் யாருடன் கூட்டணி என்று கேட்கின்றனர். [illegible] தேர்தல் நேரத்தில் [illegible] முடிவு செய்வேன் - என்றார்.

# பிச்சைக்காரிக்கு அடித்தது அதிஷ்டம் பூமாலையுடன் கிடைத்த தங்கச்சங்கிலி

சென்னை, நவ.25

சென்னை வடபழனி முருகன் கோவில் வாசலில், வெளிநாட்டுக்காரர் ஒருவர் பிச்சைக்காரிக்கு அன்பளிப்பாக கொடுத்த மாலையுடன் தவறுதலாக தனது தங்கச் சங்கிலியையும் சேர்த்து கொடுத்துவிட்டார்.

இதையடுத்து அந்தப் பிச்சைக்காரி தலைமறைவாகி விட்டார். அவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

தென்னாப்பிரிக்காவில் வசிப்பவர் லோகநாதன் (வயது 70). தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இவர், 10 நாட்கள் விடுமுறையில் மனைவியோடு லோகநாதன் சென்னை வந்தார்.

நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் வடபழனி முருகன் கோவிலில் வழிபாடு செய்தார். வெளியே வந்த அவரிடம், அங்கிருந்த பிச்சைக்காரப் பெண் ஒருவர் பிச்சை கேட்டார்.

உடனே லோகநாதன் கழுத்திலிருந்த பூமாலையை எடுத்து பிச்சைக்காரி கழுத்தில் போட்டு கொஞ்சம் பணமும் கொடுத்தார். மாலையைக் கழற்றிப் போடும்போது கழுத்தில் கிடந்த 7 சவரன் தங்க சங்கிலியையும் சேர்த்து தெரியாமல் கழற்றிப் போட்டுவிட்டார். பின்னர் தான் தங்கியிருந்த வீதிக்குச் சென்று பார்த்த போதுதான் கழுத்தில் தங்க சங்கிலி இல்லாதமை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

அப்போதுதான் மாலையோடு சங்கிலியையும் சேர்த்து பிச்சைக்காரியின் கழுத்தில் போட்டமை அவருக்குத் தெரியவந்தது. உடனே அலறி அடித்துக் கொண்டு ஓடி அந்தப் பிச்சைக்காரியைத் தேடிப் பார்த்தார். ஆனால், பிச்சைக்காரி நகையோடு ஓட்டம் பிடித்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொடரைச் சுவைத்தது இந்திய அணி இங்கிலாந்தைக் கைகழுவியது மழை!

பெங்களூர், நவ.25

டோனி தலைமையிலான இந்திய அணி மீண்டும் ஒருமுறை சாதித்துக் காட்டியுள்ளது. நேற்று முன்தினம் பெங்களூரில் நடந்த பரபரப்பான நான்காவது போட்டியில் ஷேவாக்கின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க, 'டக்வோர்த் லூவிஸ்' முறைப்படி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது. இதன்மூலம் ஒரு நாள் தொடரை 4-0 என இந்திய அணி கைப்பற்றியது. வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கிய இங்கிலாந்து அணியை மழையும் கைகழுவி விட்டது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி 7 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகிறது. முதல் மூன்று போட்டிகளின் முடிவில் இந்தியா 3-0 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. இந்நிலையில் நான்காவது போட்டி நேற்று முன்தினம் பெங்களூரில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்துஅணித் தலைவர் பீட்டர்சன் களத்தடுப்பைத் தேர்வு செய்தார். இந்திய அணியில் சச்சின் வரவால், ரோகித் சர்மா நீக்கப்பட்டார்.

தொடக்க வீரர்களாக சச்சின், ஷேவாக் வந்தனர். அன்டர்சன் வீசிய ஓவரின் முதல் பந்தில் ஒரு பவுண்டரி அடித்து ஷேவாக் தனது வழக்கமான அதிரடியை ஆரம்பித்தார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சச்சின் 21 பந்துகளில் 11 ஓட்டங்களை எடுத்து பிராட்டின் பந்தில் போல்டாகி ஏமாற்றினார்.

அடுத்து வந்த கம்பீர், பிராட் பந்தில் அடுத்தடுத்து மூன்று பவுண்டரிகள் விளாசினார். அன்டர்சன் வீசிய 12ஆவது ஓவரில், ஷேவாக் இரண்டு பவுண்டரிகள் ஒரு சிக்சர் உட்பட 15 ஓட்டங்கள் எடுக்க, இந்தியாவின் ஓட்டவேகம் அதிகரித்தது. இந்தியா 14 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 82 ஓட்டங்கள் எடுத்தநிலையில் மழை பெய்ததால் ஆட்டம் தடைப்பட்டது. சுமார் 2 மணி நேரத்துக்குப் பின்னர் ஆட்டம் மீண்டும் தொடங்கியது. இரு அணிகளும் தலா 44 ஓவர்கள் விளையாடும் என அறிவிக்கப்பட்டது. இங்கிலாந்தின் பந்து வீச்சை துவம்சம் செய்த ஷேவாக் ஒரு நாள் அரங்கில் 32ஆவது அரைச்சதம் கடந்தார்.

இந்நிலையில் மீண்டும் மழை பெய்ய, ஆட்டம் இரண்டாவது முறையாகத் தடைப்பட்டது. இம்முறை சுமார் 3 மணி நேர தாமதத்துக்கு பின்னர் ஆட்டம் தொடங்கியது. ஓவர் எண்ணிக்கை 22 ஆக குறைக்கப்பட்டது. ஷேவாக் 57 பந்துகளில் 69 ஓட்டங்கள் (3 சிக்சர், 9 பவுண்டரி) எடுத்து, ஆட்டமிழந்தார். கம்பீர் 40 ஓட்டங்களுக்குப் பெவிலியன் திரும்பினார்.

அடுத்து வந்த யுவராஜ், பீட்டர்சனின் ஓவரில் இரண்டு சிக்ஸர்கள் அடித்தார். 22ஆவது ஓவரின் ஐந்தாவது பந்தில் சிக்ஸருக்கு ஆசைப்பட்ட தோனி(9) ஆட்டமிழந்தார். கடைசிப் பந்தில் யூசுப் பதான் இமாலய சிக்ஸர் அடிக்க, இந்திய அணி 22 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 166 ஓட்டங்கள் எடுத்தது. யுவராஜ் 25, யூசுப் பதான் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு 'டக்வோர்த்-லூவிஸ்' முறைப்படி 22 ஓவரில் 198 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தொடக்க வீரராக வந்த போபரா (1) விரைவில் ஆட்டமிழந்து, ஏமாற்றம் அளித்தார். பெல் (12), பீட்டர்சன் (5) ஆகியோரும் இம்முறை சோபிக்கவில்லை.

பின்னர் அதிரடியாக விளையாடிய ஓவைஸ் ஷா 35ஆவது பந்தில் அரைச்சதம் கடந்தார். இவர் 48 பந்துகளில் 72 ஓட்டங்கள் (3 சிக்ஸர், 9 பவுண்டரி) எடுத்தார். இவரைத் தொடர்ந்து பிளின்ரொபும் (30 பந்துகளில் 41ஓட்டங்கள்) வெளியேற இங்கிலாந்துக்கு பின்னடைவு ஏற்பட்டது.

கடைசி ஓவரில் 27 ஓட்டடங்கள் எடுத்தால் வெற்றி என்ற இக்கட்டான நிலை இங்கிலாந்துக்கு ஏற்பட்டது. முனாப் பட்டேல் நிதானமாகப் பந்துவீச, அந்த ஓவரில் 7 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இறுதியில் இங்கிலாந்து அணி 22 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 178 ஓட்டங்கள் எடுத்து, 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதன்மூலம் இந்திய அணி ஒரு நாள் தொடரை 4-0 என கைப்பற்றியது. இவ்விரு அணிகளும் மோதும் ஐந்தாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி கட்டாக்கில் நடக்கிறது.

# தேர்வுக்குழுக் கூட்டத்தில் நடந்ததை வெளியே கசியவிட்டவர்கள் யார்?

## இந்திய கிரிக்கெட் சபை கடுப்பு

புதுடில்லி, நவ.25

தேர்வுக்குழுக் கூட்டத்தில் நடக்கும் விடயங்களை வெளியில் சொல்லக்கூடாது என்று தேர்வாளர்களுக்கு இந்தியக் கிரிக்கெட் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது மற்றும் 5ஆவது போட்டிக்கான இந்திய அணி கடந்த 20ஆம் திகதி கான்பூரில் அறிவிக்கப்பட்ட போது அணியில் இருந்து எம்.விஜய், ஆர்.பி. சிங் ஆகியோர் நீக்கப்பட்டு அவர்களுக்கு பதிலாக டெண்டுல்கர், இர்பான் பதான் ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

ஆர்.பி.சிங்கை நீக்க எடுத்த முடிவுக்கு தலைவர் டோனி எதிர்ப்புத் தெரிவித்து தேர்வாளர்களுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அவரது வேண்டுகோள் ஏற்கப்படாததால் ஒரு கட்டத்தில் தனது பதவியை ராஜிநாமா செய்ய வேண்டி வரும் என்று மிரட்டல் விடுத்தார்.

அணி தேர்வுக் கூட்டத்தில் தலைவர் டோனி, பயிற்சியாளர் கேரி கிர்ஸ்டன், இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் என்.சீனிவாசன், தேர்வுக் குழுத் தலைவர் ஸ்ரீகாந்த், உறுப்பினர்கள் யஷ்பால் சர்மா, நரேந்திர ஹிர்வானி, சுரேந்தர் பாவே, ராஜா வெங்கட் ஆகிய 8 பேர் பங்கேற்றனர்.

அணித் தலைவர் டோனி கூட்டத்தில் பேசிய விவகாரம் தேர்வுக் குழு உறுப்பினர்களில் யாரோ ஒருவருக்கு நெருங்கிய நண்பர் மூலம் தான் வெளியில் கசிந்ததாக செய்தியை வெளியிட்ட தொலைக்காட்சி தெரிவித்திருந்தது.

தான் ராஜினாமா செய்வதாக சொல்லவில்லை என்று டோனி மறுத்தாலும் உள்ளுக்குள் பேசிய விவகாரம் எப்படி வெளியில் வந்தது என்று தனது ஆதங்கத்தை கடுமையாக தெரிவித்திருந்தார். இதனால் அவர் ஆர்.பி.சிங்குக்காக வாதாடியது உண்மை தான் என்பது உறுதியானது.

தேர்வுக் குழுக் கூட்டத்தில் நடந்த சம்பவம் வெளியில் கசிந்தது இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகளுக்கும் கடும் அதிருப்தியை கொடுத்துள்ளது. இதைத் தொடர்ந்து தேர்வாளர்களுக்கு இந்திய கிரிக்கெட் சபை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் நடக்கும் விவாதங்களை ஒரு போதும் வெளியில் சொல்லக்கூடாது என்று தேர்வாளர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.




# இலங்கை - சிம்பாப்வே இடையிலான மூன்றாவது போட்டி மழையால் தடங்கல்

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் சிம்பாப்வேயின் கராரே விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டி கடும்மழை காரணமாக தாமதமாகவே ஆரம்பமானது. இதனால் போட்டி 28 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. நேற்று மாலை இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னர் நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றிபெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விரு அணிகளுக்குமிடையில் மொத்தமாக 5 ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில், இன்னும் ஒரு போட்டியில் வெற்றிபெற்றால் தொடரை இலங்கை அணி தனதாக்கிக்கொள்ளும்.

இதனைத் தவிர்ப்பதற்கு கடுமையாகப் போராடவேண்டிய நிலையில் சிம்பாப்வே அணி உள்ளது.

# அடுத்த மூன்று போட்டிகளிலும் ஏனைய வீரர்களுக்கு வாய்ப்பு



பெங்களூர், நவ.25

இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் இந்தியா வெற்றி பெற்றது. டக்வோர்த் லூவிஸ் விதிப்படி 19 ஓட்டங்களால் வென்றது.

வெற்றி குறித்து இந்திய அணித் தலைவர் டோனி கூறியதாவது:-

சகீர்கானின் பந்து வீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. இந்தத் தொடரில் நன்றாக வீசி வருகிறார். அதோடு அடுத்த பந்துவீச்சாளர்களுக்கும் ஆலோசனை வழங்குகிறார். இதற்காக அவரைப் பாராட்டுகிறேன். சகீர் கானுடன் இணைந்து இஷாந்தும், முனாப்பும் நன்றாகப் பந்து வீசினார்கள். ஒட்டுமொத்தமாக வீரர்களின் கூட்டு முயற்சியால் வெற்றி கிடைத்தது.

அணியில் இடம் பெற்று, விளையாட வாய்ப்பு கிடைக்காமல் போன மாற்று வீரர்களுக்கு எஞ்சிய 3 போட்டிகளிலும் வாய்ப்புக் கொடுக்கப்படும். இனிவரும் போட்டிகளில் சில மாற்றங்கள் இருக்கும். நாங்கள் தொடரை வென்று விட்டோம் என்றாலும் தொடர்ந்து வெற்றி பெறுவதையே விரும்புகிறோம்.

இவ்வாறு டோனி கூறினார்.

வீரட்கோக்லி, ஒஜா, இர்பான்பதான், ஆகிய வீரர்களுக்கு எஞ்சிய போட்டிகளில் வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. 5ஆவது போட்டி பகல்-இரவாக கட்டாக்கில் வருகிற 26ஆம் திகதி நடக்கிறது.

# என்ன... சச்சினைக் கண்டு பயந்தேனா?

## மறுக்கிறார் வோர்ன்



''சச்சினின் ஆட்டத்தைப் பார்த்து பயந்ததில்லை. அவர் கனவில் வந்து தொல்லை தருகிறார் என சாதாரணமாகச் சொன்னதை ஊடகங்கள் பெரிதாக்கிவிட்டன,'' என கூறியிருக்கிறார் அவுஸ்திரேலிய சுழல் மன்னன் ஷேன் வோர்ன்.

கடந்த 1998இல் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலிய அணியில் இடம்பிடித்திருந்தார் வோர்ன். அப்போது, இவரது பந்துவீச்சை அடித்து நொறுக்கினார் சச்சின். இதையடுத்து கனவிலும் வந்து தனது பந்தை சச்சின் சிக்சருக்கு அனுப்பினார் என வோர்ன் தெரிவித்திருந்தார். இந்நிலையில் புதிதாக எழுதியுள்ள 'ஷேன் வோர்ன் செஞ்சுரி' என்ற புத்தகத்தில் சச்சினைக் கண்டு ஒருபோதும் பயந்ததில்லை என வோர்ன் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது-

சச்சினின் துடுப்பாட்டம் எப்போதும் என்னைப் பயமுறுத்தியது கிடையாது. 1998இல் இந்தியத் தொடரின் போது இரவு எனக்கு பயங்கர கனவு வரப்போகிறது என சாதாரணமாக கூறியதை ஊடகங்கள் பெரிய விடயமாக்கிவிட்டன. நான் யாருக்கும் பயந்தது கிடையாது. இதனால் என்னைக் கர்வம் கொண்டவன் என எண்ணிவிட வேண்டாம். என் திறமையில் நம்பிக்கை வைத்துள்ளேன் அவ்வளவு தான்.

சச்சின், லாரா போன்ற துடுப்பாட்ட வீரர்களை எதிர்கொள்வது கடினம் தான். அவர்கள் தங்களது வேலையை சிறப்பாக செய்யக்கூடியவர்கள். ஒரு சமயம் அவர்கள் எனது பந்தை மைதானத்துக்கு வெளியே சிக்ஸருக்கு அனுப்புவார்கள். அடுத்த முறை அவர்களை ஆட்டமிழக்கச் செய்து, எனது திறமையையும் நிரூபிப்பேன்.

நான் புள்ளிவிவரங்களை அதிகம் பார்ப்பது கிடையாது. இது வீரர்களை தவறான திசையில் அழைத்து சென்றுவிடும். போட்டி வெற்றியாளர்கள் அதிக சராசரி கொண்டவர்களாக இருக்க முடியாது. இதனால் ஸ்டீவ் வோவை விட அவரது சகோதரர் மார்க் வோ சிறந்த போட்டி வெற்றியாளர் என சொல்லலாம். இவர்கள் இருவரும் வேறு வேறு இடங்களில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்றால், மார்க் வோ விளையாடும் போட்டியை காண்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பேன். இவ்வாறு வோர்ன் தெரிவித்தார்.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.,)தொடரில் இம்முறை அதிக சம்பளம் கொடுப்பார்கள் என எதிர்பார்க்கிறேன் என்கிறார் வோர்ன். இவர் கூறுகையில், ''ஐ.பி.எல்., தொடரின் முதல் தொடர் அருமையாக இருந்தது. இதில் தலைவராக செயல்பட்டு, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு கோப்பை வென்றமை மகிழ்ச்சி அளிக்கிறது. [illegible] புக்கு அதிக லாபம் கிடைத்துள்ளது. ராஜஸ்தான் ரோயல்ஸ் அ[illegible] எனக்கு அதிக பங்கு இருக்கிறது. இம்முறை அதிக சம்பளம் கொடுப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்,'' என்றார்.

# 'வயாகரா' வலையில் வீரர்கள்?

நியூயார்க், நவ. 25

விளையாட்டு வீரர்கள் 'வயாகரா' மாத்திரைகளை ஊக்க மருந்தாகப் பயன்படுத்தும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. இதையடுத்து 'வயாகராவுக்கு' தடை விதிப்பது பற்றி உலக ஊக்க மருந்துத் தடுப்பு மையம் ஆலோசித்து வருகிறது.

ஆண்மைத் தன்மையை அதிகரிக்க 'வயாகரா' மாத்திரைகளை ஆண்கள் உட்கொண்டு வருகின்றனர். படுக்கை அறையில் பயன்படுத்தப்படும் இந்த மாத்திரை, தற்போது விளையாட்டரங்கில் ஊக்க மருந்தாக உலா வருகிறது. பென் ஜோண்சன், மரியன் ஜோன்ஸ் போன்றவர்கள் 'ஸ்டீரொய்ட்' உள்ளிட்ட ஊக்க மருந்துகளை உட்கொண்டு சோதனையில் சிக்கினர். இப்போது 'வயாகரா' புயலைக் கிளப்பியுள்ளது. தடகளப் போட்டிகளில் வீரர்கள் ஊக்க சக்திக்காக இவ்வகை மாத்திரைகளை பயன்படுத்துகிறார்களாம். தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துப் பட்டியலில் 'வயாகரா' இல்லாததால் சோதனையின்போது சுலபமாக தப்பி விடுகின்றனர்.

இப்பிரச்சினை விஸ்வரூபம் எடுக்க, உலக ஊக்க மருந்து தடுப்பு மையம் விழித்துக் கொண்டுள்ளது. இது பற்றி ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி அமெரிக்காவின் மேரிவூட் பல்கலைக்கழகத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது. கடல் மட்டத்தைக் காட்டிலும் மிக உயரத்தில் நடக்கும் போட்டிகளில் 'வயாகரா' அதிக பலனைத் தரும். உதாரணமாக 2004இல் ஜேர்மனி மலையேற்ற குழுவினர் 17,200 அடி உயரம் கொண்ட எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியபோது, 'வயாகரா' பயன்படுத்தியுள்ளனர். இது ரத்த ஓட்டத்தை சீராக வைக்க உதவியதாக குறிப்பிட்டுள்ளனர்.

இது குறித்து உலக ஊக்க மருந்து தடுப்பு மையத்தின் அதிகாரி ஒருவர் கூறுகையில், '[illegible] பல்கலைக்கழக ஆய்வு வெளியானவுடன் விளையாட்டுப் போட்டிகளில் வீரர்கள் 'வயாகரா' பயன்படுத்த தடை விதிக்கப்படலாம். வரும் செப்ரெம்பர் 2009இல் நடக்க [illegible]கால ஒலிம்பிக் போட்டிக்கு முன்பாகத் தடை விதிக்க அதிக வாய்ப்பு உள்ளது,'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிலிருந்து கிடைத்த பொருள்கள் வன்னி மக்களுக்கு சில தினங்களில் விநியோகம்

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சொல்கிறார்

கிளிநொச்சி, நவ. 25

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களுக்கென இந்தியா வழங்கியுள்ள நிவாரணப் பொருள்களின் விநியோகத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் உதவியுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முதல் ஆரம்பிக்க அரசு எண்ணியுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி. திவாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மனிதாபிமான உதவிகளை வன்னிக்குக் கொண்டு செல்வது மற்றும் சேமிப்பதில் தாம் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னிக்கு தரைப்பாதையூடாக 1,760 மெற்றிக் தொன் பொருள்களைக் கொண்டு செல்வது இலகுவான விடயமல்ல. இதற்கு 160 லொறிகள் தேவைப்படும். மேலும் இவற்றைக் கிளிநொச்சி, விஸ்வமடு மற்றும் புதுக்குடியிருப்பில் சேமித்து வைக்க வேண்டும். - என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

செஞ்சிலுவைக் குழுவிடம் இந்தியாவின் உதவிப் பொருள்களைச் சேமிப்பதற்கான போதிய வசதிகளோ அல்லது விநியோகிப்பதற்கான வசதியோ இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு விநியோகத்தினை தானே மேற்கொள்ளப் போவதென்றால் அவர்கள் அரசின் களஞ்சிய சாலைகளைக் குத்தகைக்கு எடுக்க வேண்டிய நிலையேற்படும் என மேலும் தெரிவித்துள்ள திவாரத்ன அங்குள்ள பிரதேச செயலாளர்களுக்கே வன்னி மக்கள் முகாம்கள் குறித்து நன்கு தெரியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியில் மனிதாபிமான உதவிகள் மக்களின் குடும்ப அட்டையைப் பயன்படுத்தியே விநியோகிக்கப்படும் என்றும் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற அரச அமைப்புகள் ஊடாகவே அவை விநியோகிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-சி)

# இரத்மலானை வீட்டில் 3 சடலங்கள் மீட்பு

கொழும்பு, நவ. 25

இரத்மலானை, பதோவிட்டக் பகுதியில் உள்ள பாழடைந்த வீடொன்றில் இருந்து மூன்று சடலங்களைப் பொலிஸார் நேற்றுக்காலை மீட்டுள்ளனர்.

இரும்புக்கடை உரிமையாளர் ஒருவர், அவரது உறவினர் ஒருவர் மற்றும் அவரது உதவியாளர் ஆகியோரது சடலங்களே அவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

மூன்று நாள்களுக்கு முன்னர் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக கல்கிஸைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

# திருமலையில் வெள்ள அபாயம்; 124 குடும்பங்கள் இடம்பெயர்வு

திருகோணமலை, நவ.25

நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக பல பகுதிகளில் வெள்ள அபாயம் தோன்றியுள்ளது.

திருகோணமலை, மூதூர், கிண்ணியா, குச்சாவெளி, சேருவலப் பகுதிகளில் வெள்ள அபாயத்தினால் பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

மூதூர்ப் பகுதியில் 124 குடு[illegible]கள் இடம் பெயர்ந்து உறவின[illegible]ில் தஞ்சம் புகுந்துள்ளன என்று[illegible] தெரிவிக்கப்படுகிறது. நாட்டின் பல பகுதிகளிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக சமைத்த உணவுகளை வழங்கும்படி பிரதேச செயலாளர்களுக்கு அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது. (அ-சி)

# தெல்லிப்பழையில் வெற்றிபெற்ற 24 விவசாயிகள் இன்று அளவெட்டியில் கௌரவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், நவ.25

தெல்லிப்பழை விவசாயப் போதானாசிரியர் பிரிவில் போட்டியிட்டு முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று வெற்றியீட்டிய 24 விவசாயிகளை கௌரவிக்கும் வைபவம் இன்று முற்பகல் 11 மணிக்கு அளவெட்டி மத்தி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விவசாயப் போதனாசிரியர் செல்வி பொ. மாதுமை இந்நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார்.

கௌரவிப்பு விழாவில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் திரு.எஸ்.முரளீதரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், தெல்லிப்பழை கால்நடை வைத்திய அதிகாரி திருமதி எஸ். ஜெயதாட்சாயணி ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர். கௌரவவிருந்தினர்களாக தெல்லிப்பழை கமநலசேவை பெரும்பாக உத்தியோத்தர் திருமதி சா.குகநேசன், தெல்லிப்பழை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.ஜெகநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

விழா மண்டபத்தில் விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்பத் தகவல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் றுவான் இன சோளவிதையும், திஸ்ஸ இன நிலக்கடலை விதையும் ரவி இன குரக்கன் விதையும் தொழில்நுட்ப தகவல் அடங்கிய துண்டுப் பிரசுரங்களும் விற்பனைக் காக வைக்கப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றியீட்டிய விவசாயிகளின் பெயர் விவரம் வருமாறு:-

★சிறந்த நெல் உற்பத்தியாளர்

1 ஆம் இடம்- இ.துரைசிங்கம் (நரியிட்டான், மல்லாகம்), 2 ஆம் இடம் - ம.பத்மநாதன் (அளவெட்டி மத்தி), 3 ஆம் இடம் - ந.கணேசமூர்த்தி(அளவெட்டி மத்தி).

★ சிறந்த சேதனப் பண்ணையாளர்

1 ஆம் இடம் - த.சிவநேசன் (அளவெட்டி மேற்கு), 2 ஆம் இடம் - மு.ஆறுமுகம் (துர்க்காபுரம், தெல்லிப்பழை), 3 ஆம் இடம்-க.வேலாயுதம்(தெல்லிப்பழைகிழக்கு).

★சிறந்த சுயவிதை நெல் உற்பத்தியாளர்

1 ஆம் இடம் - க.கதிரன்(மல்லாகம் வடக்கு), 2 ஆம் இடம் - க.கணேசமூர்த்தி (நீலியம்பனை, மல்லாகம்), 3 ஆம் இடம் - நா.லோகநாதன்(மல்லாகம்).

★சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்

1 ஆம் இடம் - அ.இராசேந்திரம் (சிறுவிளான்,இளவாலை), 2 ஆம்இடம்-சி.விஜயரத்தினம் (அளவெட்டி வடக்கு), 3 ஆம் இடம் - சி. விக்கினேஸ்வரன் (அளவெட்டி மத்தி)

★ சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயி

1 ஆம் இடம் - து.மகேஸ்வரி (கட்டுவன் தெற்கு), 2 ஆம் இடம் - ம.தேவ சுரேகா (கட்டுவன் மேற்கு), 3 ஆம் இடம் - வி. திலகவதி (அளவெட்டி தெற்கு).

★சிறந்த சோளச் செய்கையாளர்

1 ஆம் இடம் - க.விஜயகுமார் (அளவெட்டி வடக்கு), 2 ஆம் இடம் - செ.ஈஸ்வரன்(அளவெட்டி மேற்கு), 3 ஆம் இடம் - இ.வாமதேவன்(கட்டுவன் மேற்கு).

★ சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்

1 ஆம் இடம் - செ.லோகநாதன் (அளவெட்டி மத்தி), 2 ஆம் இடம்- நா.முருகையா (அளவெட்டி வடக்கு), 3 ஆம் இடம் - க.சற்குணேஸ்வரன்(அளவெட்டி மேற்கு).

★சிறந்த குரக்கன் செய்கையளர்

1 ஆம் இடம் - இ.அண்ணாமலை (தெல்லிப்பழை கிழக்கு), 2 ஆம் இடம் - சி.சிவஞானசம்பந்தர் (பன்னாலை), 3ஆம் இடம் - ஆ.பாலசுப்பிர மணியம் (தெல் லிப்பழை). (அ)

# நேர அட்டவணை, முன்னறிவிப்பு இல்லாத மின்வெட்டால் மாணவர்கள் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.20

தென்மராட்சி பிரதேச மாணவர்களின் கல்வியில் இலங்கை மின்சார சபையின் அக்கறையின்மை குறித்து பிரதேச பெற்றோர் பெரும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு ஒரு மாதம் இருக்கும் வேளையில் நேர அட்டவணை இன்றி இரவில் இரண்டு மணி நேரம் இடைஇடையே மின்சாரத்தை நிறுத்துகின்றனர். அத்துடன் காலை வேளையிலும் 4 மணி தொடக்கம் 7 மணிவரை தொடர்ச்சியாக மின்தடை ஏற்படுவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

இதேவேளை, வலி.வடக்கு, வலி.தெற்குப் பகுதிகளிலும் இடம்பெறும் மின்வெட்டினால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கும் நாளாந்தம் உள்ளாகி வருகின்றார்கள் என்று பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலைகளில் வகுப்பேற்ற பரீட்சைகள் ஆரம்பமாகியுள்ளதுடன் அடுத்த மாதம் ஜீ.சி.ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் இரவு நேரங்களில் பாடங்களைக் கற்க முடியாது அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுகிறது.

இரவு நேரத்தில் மாலை 6 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் அடிக்கடி மின்வெட்டு இடம்பெறுவதினால் மாணவர்கள் கற்க முடியாது திண்டாடுகின்றார்கள்.

மாணவர்கள் அதிகாலையில் கற்கமுனைந் தாலும் கூட 5.45க்கும் 6.30 மணிக்கும் இடையே மின்வெட்டு இடம்பெறுகின்றது.

இத்தகைய முன்னறிவிப்புக்கள் எதுவுமற்ற மின்வெட்டுகளால் தமது கற்றல் செயற்பாடுகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருவதாக மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். (அ-207-86)

# பஸ்ஸுக்கு 3 மணி நேரம் காத்திருக்கும் காவலூர் மக்கள்

வேலணை, நவ.25

யாழ்ப்பாணத்துக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் மாலை 2.30 க்கு பின்னர் 777 இலக்க பஸ் சேவை 3 மணித்தியாலங்களுப்புப் பின்புதான் அடுத்த சேவை நடைபெறுகிறது.

இதனால் அந்தப் பாதையூடாக பயணம் செய்யும் மாணவர்கள் அரச ஊழியர்கள், பொதுமக்கள் தமது கடைமைகளை முடித்தபின்னர் நீண்டநேரம் பஸ் நிலையத்தில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பி.ப. 2.30 மணிக்கும் 5.30 மணிக்கும் இடையில் பஸ் சேவை ஒன்றை [illegible] போக்குவரத்துச் சபை [illegible] கின்றனர். (அ-325)

## கண்ணீர் அஞ்சலி



24.11.2008 திங்கள் அன்று சிவபதமடைந்த

அமரர்

சின்னத்துரை ஜெகநாதன்

(மணியம்)

நீராகி வேராகி நின்று
நிழல் பரப்பி முன்னும் பின்னுமாய்
விறுவிறுப்புடன் பல ஆண்டுகள்
எம் நிறுவனத்தில் பணியாற்றி மணியம் என்ற
பெயரைப் பதித்தவனே
தோல்வியே இல்லாத உன் வாழ்வு
சொல்லும் தரமன்று

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு கண்ணீரைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

E.S.P & Co, கஜமுகன் ஹாட்வெயர் உரிமையாளரும், குடும்பத்தினரும், நிறுவனச் சமூகத்தினரும்,
149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்



### சின்னத்துரை ஜெகநாதன்

(மணியம், ஊழியர் E.S.P. அன்கோ)

தொல்புரம் மத்தி, தொல்புரத்தைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஜெகநாதன் நேற்று (24.11.2008) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியரத்தினத்தின் அன்புக் கணவரும், வரலக்ஸ்மி, கம்சலா, தயாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபாலசிங்கம், ஜெயானந்தன் (ஆனந்தன்), அமரர் ஜெயக்கொடி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.11.2008) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 1.30 மணியளவில் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயபாலசிங்கம்,
ஜெயானந்தன் (ஆனந்தன்)
(சகோதரர்கள்)

இல.02, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.



### நாகலிங்கம் கந்தசாமி

(முன்னாள் விவசாய ஆராய்ச்சி நிலைய ஊழியர், திருநெல்வேலி)

இருபாலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தசாமி நேற்று (24. 11.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், யோகராணியின் கணவரும், கோகுலவாசன் (கொலண்ட்), கோகுலவாணி, தபேந்திரன் (சுவிஸ்), சிறீனிவாசன் (கனடா) ஆகியோரின் தந்தையும், ராஜி, லோஜினி, விக்னேஸ்வரன், தர்சினி ஆகியோரின் மாமனாரும், சுப்பிரமணியம் (கனடா), நாகம்மா, முத்துக்குமாரு ஆகியோரின் சகோதரரும், சுவீந்தன், அபிராமி, அன்ஷா, விதுஷா, துவாரகா, கீர்த்தனா, பிரணவன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2008) செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ராஜ்பவனம்'
ராசையா லேன் (K.R Inn Lane)
பலாலி வீதி, கோண்டாவில்.

தகவல்:
மனைவி, மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு தீர்வு தர விரும்பினால் புலிகளுடன்தான் அரசு பேசவேண்டும்



கொழும்பு, நவ.25

தமிழ் மக்களின் பிரச்சினைக்குப் பொருத்தமான அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பதாக இருந்தால் அரசு தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் மாத்திரம்தான் பேசவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நேற்று நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டமைப்பின் எம். பி. சொலமன் சிறிலே இதைக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வெற்றிகொள்ள முடியாத யுத்தத்திற்காக அரசு தனது முழுப் பலத்தையும், வளத்தையும் பயன்படுத்துகிறது. இதனால் அழிவு மட்டும் தான் மிஞ்சப்போகிறது.

இந்த அழிவில் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்றால் அரசு உடன் யுத்தத்தை நிறுத்தி தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளான புலிகளுடன் மாத்திரம் பேச்சு நடத்த வேண்டும்.

இப்பேச்சின் ஊடாக தமிழரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்படல் வேண்டும்.

இந்த யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த வன்னி மக்களுக்கு வழங்குவதற்காக இந்திய அரசாலும் தமிழ் நாட்டு மக்களாலும் அத்தியாவசியப் பொருள்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவை இன்னும் வன்னி மக்களுக்கு வழங்கப்படவில்லை.

இந்தப் பொருள்களையாரின் ஊடாக விநியோகிப்பது என்று அரசு வரட்டுக் கௌரவம் பார்ப்பதன் காரணத்தாலேயே இப்பொருள்கள் இன்னும் வழங்கப்படாமல் உள்ளன.

இதனால் வன்னி மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்; மரங்களின் கீழ் தங்குகின்றனர். அவர்களின் அவல நிலையைப் போக்குவதற்கு இந்த அத்தியாவசியப் பொருள்களை உடன் வன்னிக்கு அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமுல் படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுன்னாகம் 'அக்றிகோ' மின் உற்பத்தி நிலையத்தில் பழுதடைந்த பிரதான ஆளியினை திருத்தும் பணிகள் இடம்பெற விருப்பதாலேயே குடாநாடு முழுவதிலும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 2 நாள்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலை ஏற்பட்டது. தொடர்ந்து கனமழை பெய்யும் பட்சத்தில் பல இடங்களில் வெள்ளப் பெருக்கு உண்டாகலாம் என்று அவதானிகள் தெரிவித்தனர். பிந்திய மழையானாலும் பல இடங்களில் நெற்செய்கை தப்பிப் பிழைக்க இப்போதைய மழை உதவியிருப்பதாக விவசாயிகள் பலரும் திருப்தி தெரிவித்தனர். (அ-224)

## குடாக்கடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று கிலோ மீற்றர் எல்லைக்குள் மாத்திரமே மீன் பிடிக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்கள் என்றும் -

பூநகரி கைப்பற்றுப்பட்டுவிட்டதால் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால் தாம் விரும்பிய எல்லை வரை சென்று கடல் தொழில் ஈடுபடக்கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

மீனவர்கள் காலை 6.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை தொழிலில் ஈடுபட முடியும் என்று இராணுவத்தின் யாழ். கட்டளைத் தலைமையகம் அறிவித்திருப்பதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## நாடாளுமன்றத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றைக் கலைப்பதற்கு நாள் பார்க்கும்படி அவர் தற்போது சோதிடர்களை அணுகியுள்ளார். 9 ஆம் இலக்கத்தை தனக்கு அதிஷ்டமான எண்ணாக அவர் கருதுகிறார்" என இணையத்தளமொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ள மங்கள சமர வீர, சோதிடர்கள் நாடாளுமன்றத்தை டிசம்பர் 9 ஆம் 18 ஆம் திகதி கலைக்கு மாறு யோசனை தெரிவித்துள்ளனர் என் றும் சொன்னார்.

காலியைச் சேர்ந்த இன்னுமொரு சோதிடர் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு டிசம்பர் 23 ஆம் திகதியே சிறந்த நாள் என ஆலோசனை வழங்கியுள்ளாராம்.

"அரசு பல அரசியல் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. அரச ஊழியர்களுக்கு அடுத்த மாதங்களுக்குச் சம்பளத்தை கூட வழங்க முடியாத நிலை யில் அது உள்ளது. இதனால் இடைக்கால தேர்தலைச் சந்திப்பதை தவிர அதற்கு வேறு வழியில்லை" என்றும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

## ஈழத்தமிழர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு வந்துள்ளது. அதற்காகத்தான் லண்டன் செல்கிறேன். சில மாதங்களுக்முன் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்துப் பேச நோர்வே நாட்டில் ஒரு கூட்டம் நடந்தது. அதற்கும் அழைப்பு வந்தது. ஆனால் கூட்டத்தில் நான் பேசுவதைத் தடுப்பதற்காக எனக்கு விசா கிடைக்க விடாமல் சிலர் தடுத்தனர். இருப்பினும் நோர்வே கூட்டத்தில் கலந்துகொண்டேன். தற்போதும் நான் லண்டன் செல்ல முடியாமல் தடுக்க ஏற்பாடுகள் செய்தனர். சில நல்லவர்களின் முயற்சியினால் லண்டன் செல்கிறேன் - என்றார்.

## மாவீரர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கொடியேற்றல், ஈகைச் சுடரேற்றல், மலர் வணக்கம், அகவணக்கம், உறுதியுரை எடுத்தல், நினைவுரைகள் என்னும் ஒழுங்கில் எழுச்சிநாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று காலை 8 மணிக்கு ஏற்றப்படும்தேசியக் கொடி நாளை மறுதினம் மாவீரர்நாள் நிகழ்வு முடிவடையும்போது இறக்கப்படும்.

## கருணாநிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் பற்றி முடிவு செய்யவும், சட்டமன்றத்தில்இடம்பெற்றுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டம் நாளை (அதாவது இன்று) 25 ஆம் திகதி காலை 10 மணிக்கு தலைமைச் செயலகத்தில் எனது அறையில் நடைபெறவிருக்கிறது.

கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர், மாநிலச் செயலாளர் என்ற முறையில் ஒருவரும், சட்டமன்ற கட்சித் தலைவர் ஒருவருமாக 2 பேர் கலந்துகொண்டு தக்க ஆலோசனைகளைக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இது தொடர்பாக சகலருக்கும் கடிதம் எழுதியுள்ளேன். இந்த அவசரக் கூட்டம் பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸும், நானும் கலந்து பேசி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சட்டமன்ற கட்சித் தலைவராகவும், கட்சித் தலைவராகவும் கோ.க.மணி இருந்தபோதிலும், நிறுவனத் தலைவர் என்ற முறையில் டாக்டர் ராமதாஸ் கலந்துகொள்வார். அதைப்போலவே ம.தி.மு.க. என்றால் சட்டமன்ற கட்சித் தலைவராக மு.கண்ணப்பன் இருக்கிறார். அவரும் கலந்துகொள்ளலாம். அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான வைகோவும் கலந்து கொள்ளலாம். - இவ்வாறு அவர் கூறினார். (அ-சி)


## அந்தியேட்டி அழைப்பு



### நாகமணி சீவரத்தினம்

கடந்த மாதம் 27 ஆம் திகதி இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் நாகமணி சீவரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை புதன்கிழமை காரைக்கால் சிவன்கோயிலடி, இணுவில் கிழக்கு என்னும் முகவரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இறுதிக்கிரியையில் கலந்துகொண்ட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காரைக்கால் சிவன்கோயிலடி
இணுவில் கிழக்கு, யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்



கற்சுமி
நவம்பர் மாத வெளியீடுகள்
அம்மா
அன்னை
தாய்
அறிவு
தேடல்
வாங்கி


# மட்டக்களப்பில் மூன்று இளைஞர்கள் வெவ்வேறு இடங்களில் கொலை!

மட்டக்களப்பு, அரசடித்தீவு, சித்தாண்டி, மண்முனைப்பற்று ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் விவசாயியான நாகலிங்கம் இரட்ணசிங்கம் (வயது-30) என்பவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை அன்றைய தினம் இரவு 7.30 மணியளவில் சித்தாண்டி கிறிஸ்தவ தேவாலயத்திற்கு முன்பாக சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி செல்லத்தம்பி வேலாயுதம் (வயது-32) என்பவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை - காத்தான்குடி மண்முனைப் பற்று வாவிக் கரையில் வைத்து நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் அமரசிங்கம் கிரிதரன் (வயது-28) என்ப வரும் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். (அ-சி)

## 5தமிழ் இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலி வீதி, கடற்கரை வீதி மற்றும் உட்புற வீதி ஆகிய வற்றில் சென்ற வாகனங்களும் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப் பட்டன. இந்த வீதிகளில் சென்ற தமிழர்கள் வழிமறிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஐந்து தமிழ் இளைஞர்களும் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## சர்வகட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தனை காலமும் இருந்துவிட்டு இப்போது போய் அதில் இணைந்து கொள்வதன் மூலம் யாரோ பெற்றெடுக்கப்போகும் பிள்ளைக்குப் பெயர் வைக்க நாம் தயாரில்லை எனவும் அவர் காட்டமாகக் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. அரியநேத்திரன் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாணசபைக்கு நிறைய அதிகாரங்கள் வழங்கப்படும் என்றும் அதன் மூலம் நிறைய சேவைகளை அந்த மாகாணத்துக்குச் செய்யலாம் என்றும் முதலமைச்சர் பிள்ளையானும், அமைச்சர் ஹிஸ்புல்லாவும் கிழக்கு மாகாணத் தேர்தலின்போது கூறிவந்தனர்.

ஆனால், இன்று அந்த மாகாணத்துக்கு ஒரு துளியேனும் அதிகாரமில்லை என்று அவர்கள் இருவரும் கூறுகின்றனர். மாகாணசபைத் தேர்தலின்போது இதைத் தான் நாம் சொன்னோம். இப்போது அது உண்மையாகிவிட்டது. இந்த உண்மையை ஏற்றுக்கொண்டமைக்காக நாம் பிள்ளையானுக்கும் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளுக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்போது சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணைத்துக் கொள்ளுமாறு இந்தியா, இலங்கைக்கு கூறிவருகிறது.

இது தொடர்பாக அரசால் எமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை. 70 இற்கும் மேற்பட்ட தடவைகள் இக்குழு கூடியிருக்கிறது. இந்நிலையில் இப்போது போய் அதில் இணைந்து கொண்டு அக்குழு முன்வைக்கும் தீர்வில் கையெழுத்திட நாம்தயாரில்லை.

யாரோ பெற்றெடுக்கும் பிள்ளைக்குப் பெயர் வைக்க கூட்டமைப்பு என்றுமே தயாரில்லை - என்றார். (அ-சி)


வெற்றி இலக்கு - 12
3 ஆம் தவணை மாதிரிப் பரீட்சை
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2009
தரம் 1,2,3,4 வெளிவந்துவிட்டது.
பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் வினாத்தாள் தேவையானோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:
தயா அச்சகம்
இல.138, நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் சந்தி)


# விஞ்ஞான பீடாதிபதியாக மீண்டும் குமாரவடிவேல்

யாழ்ப்பாணம், நவ.25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடாதிபதிக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் பேராசிரியர் இ.குமாரவடிவேல் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் ஏற்கனவே மூன்று தடவைகள் விஞ்ஞான பீடாதிபதியாகப் பணிபுரிந்தவர். இப்போது தொடர்ந்தும் நேற்றைய தேர்தலில் தெரிவாகினார். பல்கலைக்கழகப் பீடாதிபதிகள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை சம்பந்தப்பட்ட பீடத்தின் பகுதித் தலைவர்களால் தெரிவு செய்யப்படுவது வழமையாகும். (அ)

# இராமநாதபுரம் மீனவர் நெடுந்தீவில் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.25

நெடுந்தீவு கடல் பிரதேசத்தில் உள்ள கற்பாறையில் சிக்கியிருந்த 4 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் காப்பற் றப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த மீன்பிடி இழுவைப்படகு காலநிலை சீர்கேட்டினால் கற்பாறையுடன் மோதியுள்ளது.

அந்தப் பிரதேசத்தில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த இலங்கை மீனவர்கள் நெடுந்தீவு கடற்படையினருக்கு அறிவித் ததையடுத்து அவர்கள் காப்பாற்றப்பட் டிருக்கிறார்கள்.

காப்பாற்றப்பட்ட மீனவர்கள் ஊர் காவற்றுறை காவற்துறையினரிடம் கடற் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்ப விசாரணைகள் மூலம் இவர் கள் தமிழ்நாடு இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. (அ-2)

## அக்கராயன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தின் 57 ஆவது படைப்பிரிவும் விசேட படை யணியொன்றும் அடம்பன், அடம்பன் வடக்கு மற்றும் புது முறிப்புக் குளம் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலை எதிர்கொண்டன என்று இராணுவம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த மோதலின்போது தமது தரப்பில் 27 படையினர் உயிரிழந்தனர் என்றும் 70 பேர் காயமடைந்தனர் என்றும் கூறியுள்ள படைத் தரப்பு, மேலும் பல இராணுவத் தினரைக் காணவில்லை என்றும் அறிவித்திருக்கிறது.

## படையினரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றை யாழ். மாவட்டப்படைத்தளபதிக்கு அனுப்ப உத்தரவிட்டது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் சலீம் மர்சூக், பி.ஏ.ரட்ணாயக்கா ஆகியோர் முன்னிலையில் இந்த மனுக்கள் நேற்று எடுக்கப்பட்டன.

வலிகாமம் வடக்கில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்வதற்காக உயர்நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தனது கண்காணிப்பு அறிக்கையை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்திருந்தது.

அதன்படி ஏற்கனவே 24 குடும்பங்கள் அங்கு மீளக் குடியமர அனுமதிக்கப் பட்டுள்ளன. மேலும் 133 குடும்பங்க ளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்றும் நூறு குடும்பங்கள் தொடர்பான விடயம் விசாரணையில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி மற்றும் தெல்லிப்பளை புற்று நோய் வைத்தியசாலை ஆகியவற்றுக்கு இடையில் அமைக்கப்பட்டிருக்கும் படை முகாம் மேலும் காங்கேசன்துறைப் பக்கமாக நகர்த்தினால் இப்பாடசாலைகளுக்கும் வைத்தியசாலைக்கும் மக்களும், மாணவர்களும் இடையூறின்றிப் போய்வரக்கூடியதாக இருக்கும் என நீதிமன்றில் மேற்படிக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து அப்படி முகாமை மாற்ற முடியுமா என்பது குறித்து ஆராய்ந்து பெப்ரவரி 2ஆம் திகதி நீதிமன்றுக்குத் தெரிவிக்கும்படி யாழ். கட்டளைத் தளபதிக்கு உத்தரவிட நீதிமன்றம் பணித்தது. (அ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org